கால்நடை பராமரிப்பு, பால்வளம்
மற்றும் மீன்வளத்துறை

# பால்வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2015–2016

### மானியக் கோரிக்கை எண். 8

**BV ரமணா**
பால் மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

## கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

# பால்வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2015–2016

### மானியக் கோரிக்கை எண். 8


**BV ரமணா**

பால் மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2015

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1–5 |
| 2 | பால்வளத் துறை | 5–15 |
| 3 | பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு முறை | 15–16 |
| 4 | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் | 17–33 |
| 5 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் | 33–43 |
| 6 | தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் | 44–50 |
| 7 | திட்டங்கள் | 51–77 |
| 8 | சிறப்புத் திட்டங்கள் | 77–89 |
| 9 | வளர்ச்சிக்கான மும்முனை நடவடிக்கைகள் | 90 |
| | 9.1. உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான முதலீடுகள் | 90–92 |
| | 9.2. பால் தர உத்திரவாத முனைப்பு | 93–98 |
| | 9.3. பால் விற்பனை அதிகரிப்பு நடவடிக்கைகள் | 98–101 |
| 10 | பால் உற்பத்தியாளர்களுக்கான சிறப்பு சேவைகள் | 102–110 |
| 11 | பணியாளர் நலன் | 110–112 |
| 12 | இரண்டாம் வெண்மை புரட்சியில் முக்கிய சாதனைகள் | 112–118 |
| 13 | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை | 118–122 |
| 14 | முடிவுரை | 122–124 |

பால்வளத்துறை
கொள்கை விளக்கக் குறிப்பு 2015–2016

**1. முன்னுரை**

தமிழகத்தில் பால்பண்ணை தொழில், ஒரு சிறந்த பொருளாதார நடவடிக்கையாக அமைந்து கிராமங்களில் உள்ள இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு குறிப்பாக கிராமப்புற மகளிருக்கு ஆண்டு முழுவதும் நிலையான ஒரு வருமானத்தை வழங்கி வருவதால் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கிராம மக்களின் வறுமையை ஒழிப்பதில் பால்வளத்தொழிலின் பங்களிப்பை கருத்தில் கொண்டு இத்துறைக்கு இந்த அரசு, கடந்த நான்கு ஆண்டுகளாக சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. இதன் காரணமாக பால் உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு உரிய விலை கிடைப்பதை உறுதி செய்யும் விதத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் பால் கொள்முதல் விலையை பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.10/-ம், எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9/–ம் உயர்த்தி வழங்கியுள்ளது.



1.11.2014 முதல் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.5/– உயர்த்தியதன் காரணமாக, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் கொள்முதல் 2014–15ல் நாளொன்றுக்கு 23.68 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்ந்தது. 2015–16ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு சராசரியாக 29.38 லட்சம் லிட்டராக இருந்தது. மேலும் 22.06.2015 அன்று முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக பட்சமாக 30.94 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது.

இந்த அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் பண்ணைகள், குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் இணையத்தில் தேவையான உட்கட்டமைப்புகளை மேம்படுத்தியதன் காரணமாக, தற்போது அதிகரித்துள்ள பால் கொள்முதல் சிரமம் எதுவுமின்றி கையாளப்பட்டு, பதப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு, பால் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களில் ஒன்றாகவும், கூட்டுறவு



அமைப்பின் கீழ் 50 சதவீதத்திற்கும் அதிகமான வருவாய் கிராமங்களை கொண்டு, நாட்டின் முதல் மாநிலமாகத் திகழ்கிறது. தமிழகத்தில், 22.95 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 11,839 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. பால் கூட்டுறவுகள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவால் நிர்வகிக்கப்படுகின்றன. பால் கூட்டுறவுகளை நிர்வகிப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு இலட்சம் இயக்குநர்களில் 31,863 மகளிர் நிர்வாக குழு இயக்குநர்களும் அடங்குவர்.

ஆவின் பாலிற்கான தேவை சந்தையில் அதிகரித்து வரும் சூழ்நிலையில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் சென்னை பெருநகர பால் விற்பனை அளவினை, நாளொன்றுக்கு 13.50 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கும் மற்றும் சென்னை மாநகருக்கு வெளியே பிற மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலம் நாளொன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கும், படிப்படியாக உயர்த்தி மொத்த விற்பனை மார்ச் 2016ல் நாளொன்றுக்கு



25 இலட்சம் லிட்டர் என்ற குறியீட்டினை எய்திட திட்டமிட்டுள்ளது.

பால்பண்ணை தொழிலின் முக்கிய பங்களிப்பை கண்டறிந்த தமிழக அரசு, **இரண்டாவது வெண்மை புரட்சி** திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், கிராமப்புற மக்களின் வருமானம் மற்றும் தமிழகத்தில் தனி நபருக்கு கிடைக்கும் பாலின் அளவு ஆகியவை உயர வழிவகை செய்துள்ளது. இந்த குறிக்கோளினை அடைய விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2011–12 முதல் 2015–16 வரையிலான ஐந்தாண்டுகளில் 60,000 கறவை பசுக்கள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 48,000 கறவைப்பசுக்கள் ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. இப்பசுக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில், பால் வழித்தடங்கள் ஆவின் நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்டு, தினமும் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் மூலம் இவர்களுக்கு நிலையான வருமானம் கிடைத்து வருகிறது.

பால் கூட்டுறவு அமைப்புகள் (ஆவின்) பால் உற்பத்தியாளர்களின் நலனை முதன்மையாகக் கருதுவதால் அரசு நிர்ணயித்துள்ள பால் கொள்முதல்

விலையுடன் கூடுதலாக கடந்த நான்கு ஆண்டுகளில் 3.48 லட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.214.51 கோடி வழங்கியுள்ளன.

**2. பால்வளத்துறை**

**2.1 பால்வளத்துறையின் குறிக்கோள்கள்:-**

1. அமைப்புசாரா பால் உற்பத்தித் தொழிலை, ஒருங்கிணைந்த அமைப்புசார் தொழிலாக மாற்ற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
2. கூட்டுறவு பால்பண்ணைகளின் செயல்பாடுகளை கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
3. பாலின் தரத்தின் அடிப்படையில் பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்தல் மற்றும் கால்நடைகளின் பால் உற்பத்தியை அதிகரிக்க தரமான கால்நடை இடுபொருட்கள் மற்றும் கால்நடைகளின் நலன் சார்ந்த சேவைகள் அளித்தல்.
4. தொலைதூர கிராமங்களில் பால் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதன் மூலம் தனியார், வியாபாரிகளின் சுரண்டல்களிலிருந்து பால் உற்பத்தியாளர்களை காத்தல்.



5. இதர தொழில்களின் வளர்ச்சிக்கு நிகராக பால்பண்ணைத் தொழிலின் தொடர் வளர்ச்சியை உறுதி செய்தல்.
6. வறட்சி காலங்களிலும், கறவை மாடுகளுக்குத் தேவையான கலப்புத் தீவனம் மற்றும் பசுந்தீவனம் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தல்.
7. உபரி பாலை கையாளத் தேவையான கிடங்கு, பதப்படுத்துதல் மற்றும் விற்பனை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
8. நுகர்வோர்களுக்கு தரமான பால், நியாயமான விலையில் தொடர்ந்து கிடைக்கச் செய்தல்.
9. பால்பண்ணை செயல்பாடுகளில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்துதல்.
10. நிர்ணயிக்கப்பட்ட தரக்குறியீட்டுடன் சரியான அளவுகளில் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்கச் செய்தல்.
11. பால் மற்றும் பால் பொருட்களை சந்தைபடுத்துதல்.



**2.2. குறிக்கோள்களை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:-**

பால்வளத்துறையின் குறிக்கோள்களை நிறைவேற்றிட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

1. சுகாதாரமான, தூய்மையான பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு கிடைக்கச் செய்தல்.
2. ஒளிவுமறைவற்ற நிர்வாகத்திற்காக பால்பண்ணை செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்.
3. கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவைப் பசுக்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல், இலவச மருத்துவ சிகிச்சை, கால்நடைகளுக்கு காப்பீடு வசதி, சமச்சீர் கலப்புத்தீவனம், பசுந்தீவன வளர்ப்புக்கு விதை மற்றும் விதை கரணை போன்ற இடு பொருட்கள் வழங்குதல்.
4. கிராம அளவில் தூய பால் உற்பத்தித் திட்டத்தை தரப் பரிசோதனை மற்றும் தேவையான



விரிவாக்க கல்வி வழங்குவதன் மூலம் பலப்படுத்துதல்.

5. மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல்.
6. பால் கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் பால்பண்ணைகளின் கையாளும் திறனை அதிகரித்தல் மற்றும் பலப்படுத்துதல்.
7. புதிய பாலகங்கள், பால் விற்பனை மையங்கள், புதிய பால் வழித்தடங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாதாந்திர பால் அட்டை விற்பனை அதிகரித்தல்.

**2.3. துறையின் நிர்வாக அமைப்பு:-**

பால்வளத்துறை 1958 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இத்துறை, பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்கள் தலைமையில் சென்னை, மாதவரம் பால்பண்ணை வளாகத்தை நிர்வாகத் தலைமையிடமாகக்கொண்டு செயல்பட்டு வருகின்றது. பால் வளத்துறை ஆணையர், பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் பதிவாளராகவும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு

இணையத்தின் மேலாண்மை இயக்குநராகவும் செயல்பட்டு வருகிறார்.

புதிய சங்கங்களை பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல், சங்கங்களை ஆய்வு செய்தல், பிரச்சனைகளின் மீது நடவடிக்கை எடுத்தல், தேர்தல் நடத்துதல், நிர்வாகக் குழு அமைத்தல் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சங்கங்களுக்கு ஆணைகள் பிறப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988 ஆகியவற்றின்படி ஆணையர் செயல்படுத்தி வருகிறார்.

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களின் சட்டரீதியான கூட்டுறவுப் பணிகளை நடைமுறைப்படுத்த, மாநில அளவில் துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் மாவட்ட அளவில் 25 துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) பணியாற்றி வருகின்றனர். இதுவரை கூட்டுறவுத் துறையிலிருந்து அயற்பணியில் நியமனம் செய்யப்பட்டு வந்த துணைப்பால் ஆணையர் (கூட்டுறவு) பணியிடம், தற்போது பால்வளத்துறையின் மூத்த துணைப்பதிவாளர்



(பால்வளம்) அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கி நிரப்பப்பட்டுள்ளது.

**துணைப்பதிவாளர்(பால்வளம்)**

தமிழகம் முழுவதும் உள்ள பால் கூட்டுறவுகளின் அன்றாட நிர்வாக மற்றும் சட்டப்பூர்வ பணிகளை செயல்படுத்த 25 துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) உள்ளனர்.

சரக துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களில் மனிதவளத்தை வலுப்படுத்தும் விதத்தில் 137 முதுநிலை ஆய்வாளர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் மூலம் நிரப்ப இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**பால் சேகரிப்பு குழுக்கள்**

கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து மாற்றுப்பணியில் பால்வளத்துறையில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்களின் தலைமையில் சேலம், தர்மபுரி, சங்கரன்கோவில், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், திருவள்ளூர், காரைக்குடி, பெரம்பலூர், விருதுநகர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 11 இடங்களில் உள்ள பால்



சேகரிப்பு குழுக்கள் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் பால் சேகரிப்பு பணிக்கு துணைபுரியும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள், கிராமங்களில் புதிய சங்கங்களை பதிவு செய்யும் பொருட்டு, கள ஆய்வுகள் மேற்கொண்டு கிராமங்களில் பால் உற்பத்தி திறனை மதிப்பிட்டு, அதன்மூலம் அதிக கிராமங்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருகின்றன. மேலும், பால் சேகரிப்புக் குழுவின் பணியாளர்கள், அதன் அதிகார எல்லைக்குள் உள்ள கிராம தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களை பார்வையிட்டு பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

**நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள்**

நாகர்கோவில், திருநெல்வேலி, கோவில்பட்டி, வள்ளியூர், சாத்தான்குளம், சங்கரன்கோவில், திருப்பத்தூர், காரைக்குடி, ராமநாதபுரம், விருதுநகர், ராஜபாளையம், சென்னை மற்றும் மதுரை ஆகிய பதின்மூன்று இடங்களில் நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் இயங்கி வருகின்றன. இந்த அலகுகள் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு



சங்கங்களுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில், நேரடியாகச் சென்று சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்குத் தேவைப்படும் மருத்துவ சேவைகளை கட்டணமின்றி வழங்கி வருகின்றன.

**2.4. பால் கூட்டுறவு சங்கங்களின் தேர்தல்:-**

கூட்டுறவு நிறுவனங்கள் மக்களாட்சி முறையில் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்ய அதன் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர் களாக இருக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், தேர்தல் நடத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையத்தை அமைக்க ஆணையிட்டார்கள். இந்த ஆணையம் 2013ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுகளின் மூன்று நிலைகளுக்கான நிர்வாகக்குழு இயக்குநர்களை தேர்ந்தெடுக்க தேர்தலை நடத்தியது.

பல்வேறு நிலைகளிலும் மகளிர் மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு இட ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. முடிவுகள் எடுக்கும் நடைமுறையில் இவர்களின் பங்களிப்பை இது உறுதி செய்கிறது.

இவ்வகையில், பால் கூட்டுறவுகளின் செயல்பாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,08,391 நிர்வாகக்குழு இயக்குநர்களால் மேற்கொள்ளப் படுகின்றது, மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களில் 31,863 இயக்குநர்கள் மகளிர் ஆவர்.

மேலும், புதிய சங்கங்கள் உருவாக்கப்படும் போதும் அல்லது காலியிடங்கள் ஏற்படும் போதும் கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் அக்காலியிடங்களை நிரப்ப தேர்தலை நடத்துகிறது.

**2.5. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்:-**

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில், சென்னையிலுள்ள மாதவரத்தில் ஒரு தரக்கட்டுப்பாடு ஆய்வகம் இயங்கி வருகிறது. இத்தரக்கட்டுப்பாடு ஆய்வகத்தில் நுகர்வோருக்கு விற்பனை செய்யும் பால் மற்றும் பால் பொருட்களின் மாதிரிகள் அடிக்கடி சோதனை செய்யப்பட்டு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. மேலும், சென்னையில், ஒரு நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகமும் செயல்பட்டு வருகிறது.



2014–15ஆம் ஆண்டில், நுகர்வோர்களுக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, இந்த ஆய்வகத்தில் 721 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டுள்ளன.

மேலும், இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பால் பண்ணைகள் ஒவ்வொன்றிலும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் தகுதி பெற்ற அலுவலர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பால் மற்றும் நுகர்வோரை சென்றடையும் பால் மற்றும் பால் பொருட்களின் தரம் ஆகியன ஆய்வு செய்யப்பட்டு தரமான பால் விற்பனை உறுதிபடுத்தப்படுகிறது.

**2.6. உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006:-**

05.08.2011 முதல் நடைமுறைபடுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2006–ன் கீழ், பால் மற்றும் பால் பொருட்கள் உட்பட அனைத்து உணவுப் பொருட்களின் தரம் குறித்த சட்டத்தினை செயல்படுத்த உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. இதற்கு முன்னர், பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தினை செயல்படுத்தும் அதிகாரம்,




பால் மற்றும் பால் பொருட்கள் 1992 ஆணையின்படி (Milk and Milk Product Order, 1992) பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**3.பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு முறை:-**

| | | |
|---|---|---|
| அடுக்கு–1 – கிராம அளவில் | – | கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ‘ஆனந்த் பாணி’ மாதிரியில் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று அடுக்கு அமைப்பில் அடிப்படை நிலையில் உள்ள இச்சங்கங்கள், கிராமங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன. |
| அடுக்கு–2– மாவட்ட அளவில் | – | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மாவட்ட அளவிலான சங்கங்கள், இவற்றில் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன. இவை தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து உபரி பாலினை கொள்முதல் செய்து, பதப்படுத்தி, பால் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்து வருகிறது. |
| அடுக்கு–3– மாநில அளவில் | – | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மாநில அளவிலான சங்கம் ஆகும். இதில் அனைத்து மாவட்ட ஒன்றியங்கள் உறுப்பினர்களாக உள்ளன. |



இவ்விணையம் பால் மற்றும் பால் பொருட்களை சென்னை பெருநகரில் நேரடியாக விற்பனை செய்கின்றது. மேலும் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் பொருட்கள் ‘‘ஆவின்’’ என்ற வணிக பெயரில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்கின்றது.



**4. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் :-**

தமிழ்நாட்டில் 'ஆனந்த் பாணி' அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் 01.02.1981 முதல் துவக்கப்பட்டு, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த வணிக நடவடிக்கைகளான பால் கொள்முதல், பதப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை போன்றவற்றை இணையம் மேற்கொண்டு வருகின்றது. இதன் நிர்வாக அலுவலகம் 'ஆவின் இல்லம்', சென்னை, மாதவரம் பால்பண்ணையில் அமைந்துள்ளது. தற்போது இணையத்திற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் 09.07.2013 அன்று இணையத்தில் பொறுப்பேற்றுக் கொண்டனர். இணையத்தின் அன்றாட நிர்வாக செயல்பாடுகள் நிர்வாக இயக்குநரால் மேற்கொள்ளப்படுகிறது.

இணையம், பல்வேறு மாவட்ட ஒன்றியங் களிலிருந்து பாலினைப் பெற்று, பதப்படுத்தி, பால்பைகளில் நிரப்பி, பால் மற்றும் பல்வேறு பால் பொருட்களை சென்னை



மாநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கிறது. மேலும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் உற்பத்தி செய்யப்படும் பால் பொருட்களுக்கு மாநிலத்திற்குள்ளும், வெளி மாநிலங்களிலும் விற்பனை வாய்ப்பை பெற்றுத் தருவதில் முக்கியப் பங்காற்றுகின்றது. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களால் உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் பொருட்கள் 'ஆவின்' என்ற பொது வணிக பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது.

இணையம், ஒன்றியங்களின் செயல்பாடுகளை வழிநடத்தி ஒருங்கிணைப்பதுடன், தேவைப்படும் நேர்வுகளில் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்குகின்றது. ஒன்றியங்களின் பால்பண்ணைகள், குளிரூட்டும் நிலையங்கள், புதிய இயந்திரங்களை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றை இணையம் நேரடியாகவோ அல்லது தேசிய பால்வள வாரியம் மூலமாகவோ நிறைவேற்றுகின்றது. மேலும், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ்



நிதியுதவி பெறுவதற்கு கருத்துருக்கள் தயார் செய்யவும் உதவுகின்றது.

இணைய கட்டுப்பாட்டில் நாளொன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் மொத்த திறன் கொண்ட 3 பால் பண்ணைகளும், நாளொன்றுக்கு 10,000 லிட்டர் திறன் கொண்ட பால் பொருட்கள் பண்ணை ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. இந்த பெருநகர பால் பண்ணைகள் அனைத்தும் சர்வ தேச தர சான்றிதழ் (ISO) மற்றும் தரத்தை உறுதி செய்ததற்கான சர்வதேச தரச்சான்று HACCP (Hazard Analysis and Critical Control Point) ஆகியவற்றை பெற்றுள்ளன. இந்த பெரு நகர பால்பண்ணைகளின் அன்றாட செயல்பாடுகள் இணை நிர்வாக இயக்குநரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த பெருநகர பால்பண்ணைகள் மற்றும் இணையத்தின் பிற அலகுகளின் விபரம் பின்வருமாறு:-

**4.1 மாதவரம் பால்பண்ணை:-**

மாதவரம் பால்பண்ணை நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனில் நியூசிலாந்து அரசின் உதவியுடன் 1962ஆம் ஆண்டு, கொலம்போ திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இதன் கையாளும்



திறன் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் சந்தை தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் படிப்படியாக நாளொன்றுக்கு 3.5 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டது. இந்த பால்பண்ணை வட சென்னையின் நுகர்வோர்களுக்கு 42 வாடகை தட வண்டிகள், 19 தனியார் முகவர்களின் வண்டிகள் மற்றும் 4 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் வழித்தடங்களின் மூலம் விநியோகம் செய்கின்றது.

கடந்த நான்கு ஆண்டுகளில், மாதவரம் பால்பண்ணையின் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு நாளொன்றுக்கு கூடுதலாக 2.2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள பால் கொள்கலன், 80,000 லிட்டர் பால் பாக்கெட் வைப்பதற்கான குளிர்பதன அறை மற்றும் குளிர்பதன வசதிகள் மேம்படுத்தப்பட்டு சிப்பம் கட்டும் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. 30 மெட்ரிக் டன் வெண்ணெய் வைப்பதற்கான ஆழ்ந்த உறைநிலை அறையும், அதற்கு 500 KVA தடையில்லா மின்சாரம் வழங்கும் மின்கலமும் நிறுவப்பட்டுள்ளது. மேற்கண்ட உட்கட்டமைப்புகளை வலுப்படுத்தியதால் நுகர்வோர் களுக்கு தரமான பால் உரிய நேரத்தில் விநியோகிப்பது

உறுதி செய்யப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் மாதவரம் பால்பண்ணையில் நாளொன்றுக்கு 3.24 இலட்சம் லிட்டர் பால் கையாளப்பட்டுள்ளது.

**4.2.அம்பத்தூர் பால்பண்ணை:-**

அம்பத்தூர் பால்பண்ணை, 1976ஆம் ஆண்டு நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடன் மொத்த விற்பனைக்கு டேங்கர் மூலம் பால் அனுப்பும் வசதியுடன் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இதன் கையாளும் திறன் நாளொன்றுக்கு நான்கு இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டது. இந்த பால் பண்ணையிலிருந்து மத்திய சென்னையில் உள்ள நுகர்வோர்களுக்கு, 41 வாடகை தட வண்டிகள், 12 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் வண்டிகள் மற்றும் 35 தனியார் முகவர்களின் வண்டிகள் மூலம் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் மற்றும் ஒரு இலட்சம் லிட்டர் பாக்கெட் பால் வைப்பதற்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளான பால் கொள்கலன்கள் மற்றும் குளிர்பதன அறை அமைக்கப்பட்டுள்ளது. 300 மெட்ரிக் டன்



வெண்ணெய் வைப்பதற்கான ஆழ்ந்த உறைகிடங்கும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய தானியங்கி சுத்திகரிக்கும் அமைப்பு (Cleaning In Place), சிப்பம் கட்டும் வசதி மற்றும் குளிர்பதன அமைப்பு ஆகியவற்றை வலுப்படுத்தியதுடன், சூரிய சக்தியின் மூலம் கொதி கலன்களுக்கு தேவையான வெந்நீர் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் அம்பத்தூர் பால்பண்ணையில் நாளொன்றுக்கு சராசரியாக 3.50 இலட்சம் லிட்டர் பால் கையாளப் பட்டுள்ளது.

**4.3.சோழிங்கநல்லூர் பால்பண்ணை:-**

சோழிங்கநல்லூர் பால்பண்ணை 1996ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடன் அமைக்கப்பட்டது. இப்பால் பண்ணை, தென் இந்தியாவின் முதல் கணினி மயமாக்கப்பட்ட தானியங்கி பால் பண்ணை ஆகும். இந்த பால்பண்ணை, ஆரம்பத்தில் பால் விற்பனை நாளொன்றுக்கு 3.50 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மூலம் மேற்கொள்ளவும் மற்றும் 50 ஆயிரம் லிட்டர் பாக்கெட் பால் தயாரித்து விற்பனை



செய்யவும் வடிவமைக்கப்பட்டு நிறுவப்பட்டது. மொத்த பால் தயாரிப்பதிலிருந்து மாறி வரும் சந்தை நிலவரம் மற்றும் தேவைக்கு ஏற்ப படிப்படியாக பாக்கெட் பால் தயாரிக்க மாற்றப்பட்டது.

இப்பால் பண்ணையில் அதிகரித்து வரும் பாக்கெட் பால் தேவையைப் பூர்த்தி செய்ய தேவைப்படும் குளிர்பதன அறை, சிப்பம் கட்டும் இயந்திரங்கள், பால் பைகள் வைக்கும் டப்புகளை சுத்திகரிக்கும் இயந்திரம் போன்ற கூடுதல் வசதிகள் இணையத்தால் அமைக்கப் பட்டுள்ளது.

தற்போது, இப்பால்பண்ணையில் சராசரியாக நாளொன்றுக்கு 4.50 இலட்சம் லிட்டர் பால் கையாளப்பட்டு வருகிறது. 32 வழித்தட வாடகை வாகனங்கள், 47 தனியார் முகவர்களின் வாகனங்கள் மற்றும் 7 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் தடங்களின் மூலம் பாக்கெட் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஒரு இலட்சம் லிட்டர் பால் கொள்கலன், 64 மெட்ரிக் டன் வெண்ணெய் ஆழ்ந்த உறைகிடங்கு, பதப்படுத்துதல், சிப்பம் கட்டுதல் மற்றும் குளிர் பதன வசதிகள் ஆகிய அமைப்புகள்



ஏற்படுத்தப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டுள்ளன. மேலும், மணிக்கு 20,000 லிட்டர் பால் சமன்படுத்தும் இயந்திரம் (Homogenizer) ஒன்றும் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளது.

**4.4. கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணை – உதகை:-**

இந்த பண்ணை உதகமண்டலத்திற்கு அருகில், வனத்துறையிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட 37.725 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இங்கு ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹோல்ஸ்டின் ஃபிரீசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டின் ஃபிரீசியன் காளைகள் பராமரிக்கப்படுகின்றன. இங்கு சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் 18 இலட்சம் உறை விந்து குச்சிகள், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்த பண்ணை, தேசிய பசு மற்றும் எருமை இன பெருக்க திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமையின் மூலம் ரூ.3.69 கோடி நிதி உதவியுடன் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

**4.5. எருமை இன உறைவிந்து நிலையம் –ஈரோடு:-**

எருமை இன உறைவிந்து நிலையம், நவம்பர்– 1983ம் ஆண்டு, ஈரோட்டில் அமைக்கப்பட்டது. இந்த அலகில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு உறை விந்து குச்சிகள் விநியோகித்தல்
2. பொலிகாளைகளை வளர்த்தல்

சராசரியாக, மாதம் ஒன்றுக்கு 8,000 எருமை இன உறை விந்து குச்சிகளுடன், 1.42 இலட்சம் பசு இன உறை விந்து குச்சிகளும் விநியோகிக்கப்படுகிறது.

மேலும், கறவை இன மேம்பாட்டு திட்ட நடவடிக்கைகள் (DIPA)அலகும் இந்நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அலகில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

1. வம்சா வழி சோதனை திட்டம் (ProgenyTesting Scheme-PTS)
2. களவெளி செயல்திறன் பதிவு திட்டம் (கலப்பின ஜெர்சி மற்றும் காங்கேயம்) (Field Performance Recording Programme -FPRP)



களவெளி செயல்திறன் பதிவு திட்டத்தின் கீழ், தமிழகத்திலுள்ள நான்கு உறை விந்து நிலையங்களுக்கு (கூட்டுறவு அமைப்பில் ஒன்றும், கால்நடை பராமரிப்புத்துறையில் மூன்றும்) உறை விந்து உற்பத்தி செய்ய, 243 கலப்பின ஜெர்சி காளை கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இதே போன்று, பாரம்பரிய இனங்களை பாதுகாக்கும் நோக்கில், உறை விந்து உற்பத்தி செய்ய 27 காங்கேயம் காளை கன்றுகள் கால்நடை துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

**4.6. அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை:-**

பால் பொருட்கள் தொழிற்சாலை 1976ஆம் ஆண்டு அயனாவரத்தில் அப்போதைய அயனாவரம் பால் வழங்கும் ஒன்றியத்தின் இடத்தில் தனி அலகாக அமைக்கப்பட்டது. ஒன்றியத்தின் கட்டிடம், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மிகவும் பழமையானதாலும், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் தேவைப்பட்டதாலும், இந்த தொழிற்சாலை 2003 ஆம் ஆண்டு அம்பத்தூர் பால்பண்ணை வளாகத்திற்கு மாற்றப்பட்டது.



கீழ்க்கண்ட பொருட்கள், அம்பத்தூர் பால் பொருட்கள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு சென்னை நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப் படுகின்றது.

**அட்டவணை – 1**

| இனிப்புகள் | ஐஸ் கிரீம் வகைகள் | நொதியூட்டப் பட்ட பால்பொருட்கள் | கூழ்ம பொருட்கள் மற்றும் பிற |
|---|---|---|---|
| • இனிப்பு கோவா<br>• பேரிச்சை கோவா<br>• மைசூர் பா<br>• குலோப் ஜாமூன்<br>• பால் பேடா | • கப் ஐஸ் கிரீம்<br>• குடும்ப சிப்பம்<br>• கசட்டா<br>• பந்து ஐஸ் கிரீம்<br>• சாக்கோபார்<br>• மாங்கோ டுயட்<br>• பைனாப்பிள் டுயட்<br>• கிளாசிக் கோன்<br>• குல்பி பார் | • இனிப்பூட்டப் பட்ட யோகர்ட்<br>• பாக்கெட் தயிர்<br>• சிறப்பு தயிர் கப்புகள்<br>• பாக்கெட் லஸ்சி<br>• புரோபயோடிக் தயிர்<br>• புரோபயோடிக் லஸ்சி<br>• சாதாரண மோர்<br>• சிறப்பு மோர் | • பனீர்<br>**பிற**<br>• இனிப்பு இல்லா கோவா<br>• நறுமண பால்<br>• நட்டி சாக்லேட்<br>• பால் சாக்லேட் |



உற்பத்தி செய்யப்படும் பால் பொருட்கள் 16 வழித்தடங்களில் வாடகை வாகனங்கள் மூலம் சில்லரை விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் மூன்று சொந்த நடமாடும் விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன. வெண்ணெய், நெய், பாதாம் பவுடர் மற்றும் அட்டைப்பெட்டிகளில் (Tetra pack) அடைக்கப்பட்ட பிற பொருட்கள் ஒன்றியங்களிலிருந்து பெறப்பட்டு விற்பனை செய்யப் படுகின்றன. சென்னை நகரிலுள்ள அனைத்து பார்லர் களுக்கும் ஐஸ்கிரீம் கொண்டு செல்வதற்கென்றே 4.5 டன் எடை கொண்ட மூன்று சொந்த குளிர்பதன வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. 2013–14ம் ஆண்டு 3,000 லிட்டர் கொள்திறனுள்ள ஒரு குளிர்விப்பு அறை ஐஸ்கிரீம் வைப்பதற்கென நிறுவப்பட்டுள்ளது.

## அட்டவணை – 2

### பால் பொருட்கள் விற்பனை :-

| 2014–15 ஆம் ஆண்டில் பால் பொருட்களின் விற்பனை | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | விவரம் | அலகு | மொத்தம் | |
| | | | அளவு | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
| I | **அம்பத்தூர் பால் உபபொருட்கள்** | | | |
| 1 | ஐஸ் கிரீம் | லி. | 3,11,906 | 643.70 |
| 2 | குலோப்ஜாமுன் | கி.கி | 7,638 | 30.50 |
| 3 | கோவா | மெ.டன் | 300 | 1,045.67 |
| 4 | பால் பேடா | மெ.டன் | 15 | 52.18 |
| 5 | பனீர் | மெ.டன் | 35 | 96.94 |
| 6 | மோர் | லி. | 5,36,701 | 119.39 |
| 7 | மைசூர் பாகு | மெ.டன் | 48 | 186.55 |
| 8 | யோகர்ட் | எண்ணிக்கை | 91,908 | 12.10 |
| 9 | லஸ்சி | லி. | 2,58,551 | 215.60 |
| 10 | தயிர் 200 மிலி | லி. | 3,77,205 | 226.58 |
| 11 | சுடு பால் | லி. | 5,75,658 | 333.65 |
| 12 | எப்எம் "என்" ரிச் பாட்டில் | எண்ணிக்கை | 4,45,943 | 75.71 |
| 13 | மில்க் ஷேக்ஸ் | எண்ணிக்கை | 6,638 | 2.18 |
| 14 | எப்எம்–பாதாம் /சாக்லெட் / பிஸ்தா | லி. | 6,657 | 4.09 |
| 15 | பீசா / சான்ட்விச் | எண்ணிக்கை | 8,134 | 1.83 |
| 16 | பால் பன் | எண்ணிக்கை | 17,444 | 3.49 |
| 17 | மில்க் சாக்லெட் | எண்ணிக்கை | 57,806 | 16.40 |
| 18 | சிறப்பு இனிப்புகள் | மெ.டன் | 11 | 65.87 |
| | **மொத்தம் (I)** | | | **3,132.43** |
| II | **ஒன்றிய பால் பொருட்கள்** | | | |
| 1 | வெண்ணெய் (சமையல்) | மெ.டன் | 768 | 2,472.50 |




| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வெண்ணெய் (உப்பு) | மெ.டன் | 18 | 61.58 |
| 3 | நெய் | மெ.டன் | 994 | 3,758.97 |
| 4 | நிலைப்படுத்தப்பட்ட பால் (டெட்ரா பேக்) – 1000 மிலி | எண்ணிக்கை | 15,536 | 7.51 |
| 5 | நறுமணப்பால் 200 மிலி | எண்ணிக்கை | 9,06,861 | 162.10 |
| 6 | மேங்கோ பானம் 200மிலி | எண்ணிக்கை | 1,65,393 | 23.88 |
| 7 | மில்க் ஷேக் டெட்டரா பேக்கில் | எண்ணிக்கை | 12,88,271 | 239.40 |
| 8 | ஆவின் டிலைட் (டெட்ரோ பினோ) | லி. | 13,654 | 4.46 |
| 9 | கொழுப்பு நீக்கப் பட்ட பால் (டெட்ரா பேக்) | எண்ணிக்கை | 4,433 | 0.42 |
| 10 | ஸ்கிம் மில்க் பவுடர் | மெ.டன் | 13 | 36.81 |
| 11 | பாதாம் மில்க் பவுடர் | மெ.டன் | 61 | 215.02 |
| 12 | பட்டர் மில்க் டெட்ராபேக்கில் | எண்ணிக்கை | 3,88,002 | 39.93 |
| 13 | ஊட்டி டீ | மெ.டன் | 4 | 5.01 |
| | **மொத்தம் (II)** | | | **6,994.59** |
| | **ஒட்டுமொத்தம் (I) + (II)** | | | **10,127.02** |

### 4.7. பால் விற்பனை:-

சென்னை பெருநகரில், தினசரி சராசரியாக 11.70 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது.






## அட்டவணை –3

### பால் விற்பனை விலை:-

| வ. எண் | பாலின் வகை | பால் பை நிறம் | விவரம் | | (500 மில்லி லிட்டருக்கான விலை – ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | கொழுப்பு சத்து % | கொழுப்பு அல்லாத இதர சத்து % | அட்டை தாரர் களுக்கு | அதிகபட்ச சில்லரை விற்பனை விலை |
| 1 | இருநிலை சமன் படுத்திய பால் | மெஜந்தா | 1.5 | 9.0 | 16.50 | 17.00 |
| 2 | சமன் படுத்திய பால் | நீலம் | 3.0 | 8.5 | 17.00 | 18.50 |
| 3 | நிலைப் படுத்திய பால் | பச்சை | 4.5 | 8.5 | 19.50 | 20.50 |
| 4 | கொழுப்பு சத்து நிறைந்த பால் | ஆரஞ்சு | 6.0 | 9.0 | 21.50 | 22.50 |



## அட்டவணை – 4

### பெருநகர விற்பனை பிரிவில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள்:–

| வ. எண் | உட்கட்டமைப்பு விவரம் | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|
| 1 | விநியோக வழித்தடங்கள் | 101 | 113 | 117 |
| 2 | வட்டார அலுவலகங்கள் | 16 | 16 | 16 |
| 3 | பால் வழங்கும் நிலையங்கள் | 443 | 470 | 470 |
| 4 | விநியோகிக்கும் இடங்கள் | 263 | 311 | 311 |
| 5 | பாலகங்கள் | 69 | 93 | 93 |
| 6 | மொத்த பால் விநியோகிப்பாளர்கள் | 47 | 47 | 71 |
| 7 | பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் | 49 | 49 | 49 |
| 8 | ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள் | 179 | 184 | 202 |
| 9 | பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனை மையம் | 216 | 215 | 215 |
| 10 | பால் பொருட்கள் விநியோக வழித்தடங்கள் | 12 | 14 | 16 |

### 4.8.பால் நுகர்வோர் சேவை மையம்:-

நுகர்வோர் தங்களது கருத்துக்களை பதிவு செய்யவும் குறைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளவும், சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் விற்பனை பிரிவில் கட்டணமில்லா

தொலைபேசியுடன் (எண்.1800–4253300) 24 மணிநேர நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகின்றது. மொத்தம் 748 புகார்கள் கடந்த 2014–15ம் ஆண்டில் பெறப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சரி செய்யப் பட்டுள்ளது.

## 5. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்:-

தமிழகத்தில், சென்னை மாவட்டம் முழுமையாக நகரமயமானதால், இம்மாவட்டம் நீங்கலாக அனைத்து வருவாய் மாவட்டங்களையும் உள்ளடக்கி 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு ஒன்றியமும் அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைக் கொண்ட நிர்வாகக்குழு மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. இந்த ஒன்றியங்கள் அதன் உறுப்பினர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து பால் சேகரிப்பு வழித்தட வாகனங்கள் மூலம் அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பான்கள் / குளிரூட்டும் நிலையங்கள்/ பண்ணைகளுக்கு அனுப்புகின்றன.



**5.1.** ஒன்றியங்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு, நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் மூலம் அவர்களின் கால்நடைகளுக்கு தேவைப்படும் மருத்துவ வசதிகளை அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்குவதுடன், சிறந்த, கால்நடை பராமரிப்பு முறைகள் குறித்த பயிற்சிகளையும் வழங்குகிறது. ஒன்றியங்களின் கால்நடை மருத்துவர்கள் கால்நடை பராமரிப்புத்துறையின் அலுவலர்களுடன் இணைந்து நோய் கட்டுப்படுத்துதல், தடுப்பூசி முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர். மேலும், ஒன்றியங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்களுக்கு சங்கங்களை நிர்வகிப்பது குறித்தும், கிராம நிலை பணியாளர்களுக்கு கால்நடைகளுக்கான முதலுதவி, செயற்கை முறை கருவூட்டல் போன்றவற்றிலும் பயிற்சி அளித்து வருகின்றது.

**5.2.** ஒன்றியங்கள் தங்களது உள்ளூர் தேவைக்குப் போக எஞ்சிய பாலை சென்னையில் விற்பனை செய்ய இணையத்தின் பால் பண்ணைகளுக்கு அனுப்பி வருகிறது. மேலும் மிகுதியான பால் மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய சமநிலை பால்பண்ணைகளுக்கு



அனுப்பப்பட்டு அங்கே வெண்ணெய் மற்றும் பால் பவுடராக மாற்றப்படுகிறது. மாவட்ட ஒன்றியங்கள், கிராம அளவில் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கவும், அதனை சரக துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) பதிவு செய்யவும் உதவுகின்றன.

**அட்டவணை – 5**

**ஒன்றியம் வாரியாக கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பால் ஊற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை**:-

| வ. எண். | ஒன்றியத்தின் பெயர் | சங்கங்களின் எண்ணிக்கை | பால் ஊற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 685 | 24,385 |
| 2 | விழுப்புரம் | 1,238 | 43,970 |
| 3 | வேலூர் | 1,162 | 65,164 |
| 4 | தர்மபுரி | 842 | 25,714 |
| 5 | சேலம் | 1,228 | 53,456 |
| 6 | ஈரோடு | 547 | 36,563 |
| 7 | கோயம்புத்தூர் | 916 | 20,875 |
| 8 | நீலகிரி | 106 | 3,310 |
| 9 | மதுரை | 1,023 | 35,537 |
| 10 | திண்டுக்கல் | 228 | 7,866 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 898 | 57,948 |
| 12 | தஞ்சாவூர் | 787 | 33,829 |
| 13 | புதுக்கோட்டை | 286 | 14,624 |
| 14 | சிவகங்கை | 591 | 13,412 |
| 15 | விருதுநகர் | 360 | 4,978 |
| 16 | திருநெல்வேலி | 880 | 14,132 |
| 17 | கன்னியாகுமாரி | 62 | 4,512 |
| | **மொத்தம்** | **11,839** | **4,60,275** |



**அட்டவணை – 6**

**ஒன்றியம் வாரியாக பால் கையாளும் திறன் (நாளொன்றுக்கு லிட்டரில்)**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால்பண்ணையின் பதனிடும் திறன் | | குளிரூட்டும் திறன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குளிரூட்டும் நிலையம் | | மொத்த பால் குளிரூட்டும் நிலையம் | | மொத்தம் |
| | | எண்ணிக்கை | திறன் | எண்ணிக்கை | திறன் | எண்ணிக் கை | திறன் | |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 1 | 50,000 | 2 | 60,000 | 11 | 45,000 | 1,05,000 |
| 2 | விழுப்புரம் | 1 | 1,00,000 | 2 | 1,40,000 | 20 | 80,000 | 2,20,000 |
| 3 | வேலூர் | 1 | 1,50,000 | 4 | 2,30,000 | 32 | 1,46,000 | 3,76,000 |
| 4 | தர்மபுரி | 1 | 2,00,000 | 2 | 60,000 | 16 | 68,000 | 1,28,000 |
| 5 | சேலம் | 1 | 3,00,000 | 3 | 2,10,000 | 45 | 1,74,000 | 3,84,000 |
| 6 | ஈரோடு | 1 | 3,00,000 | 3 | 1,35,000 | 25 | 1,19,000 | 2,54,000 |
| 7 | கோயம்புத்தூர் | 1 | 2,00,000 | 4 | 1,30,000 | 21 | 1,02,000 | 2,32,000 |
| 8 | நீலகிரி | 1 | 50,000 | 1 | 10,000 | 6 | 11,000 | 21,000 |
| 9 | மதுரை | 1 | 3,00,000 | 1 | 1,00,000 | 14 | 58,000 | 1,58,000 |
| 10 | திண்டுக்கல் | 1 | 30,000 | 2 | 40,000 | 12 | 50,000 | 90,000 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 1 | 1,50,000 | 3 | 2,30,000 | 35 | 1,65,000 | 3,95,000 |
| 12 | தஞ்சாவூர் | 1 | 26,000 | 1 | 10,000 | 13 | 51,000 | 61,000 |
| 13 | புதுக்கோட்டை | 1 | 35,000 | – | – | – | – | – |
| 14 | சிவகங்கை | 1 | 50,000 | 2 | 20,000 | 12 | 52,000 | 72,000 |
| 15 | விருதுநகர் | 1 | 50,000 | 1 | 10,000 | – | – | 10,000 |
| 16 | திருநெல்வேலி | 1 | 1,00,000 | 4 | 90,000 | 12 | 58,000 | 1,48,000 |
| 17 | கன்னியாகுமரி | 1 | 16,000 | – | – | – | – | – |
| | **மொத்தம்** | **17** | **21,07,000** | **35** | **14,75,000** | **274** | **11,79,000** | **26,54,000** |

### 5.3. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் கொள்முதல்:-


2014–15ஆம் ஆண்டில் பால் கொள்முதல் சராசரியாக நாளொன்றுக்கு 23.68 இலட்சம் லிட்டர் ஆகும். 2014–15ஆம் ஆண்டில் முதல் 7 மாதங்களில் (ஏப்ரல் முதல் அக்டோபர் வரை) சராசரி கொள்முதல் நாளொன்றுக்கு 22.12 இலட்சம் லிட்டராக இருந்தது. 1.11.2014 முதல் பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்ட பிறகு மாவட்ட ஒன்றியங்களின் பால் கொள்முதல் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்து, பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்ட பின்னர், அடுத்த 5 மாதங்களில் (நவம்பர் முதல் மார்ச் வரை) சராசரியாக பால் கொள்முதல் நாளொன்றுக்கு 25.79 இலட்சம் லிட்டர் ஆக இருந்தது. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கொள்முதல் அதிகபட்ச அளவாக 22.06.2015 அன்று 30.94 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளின் பால் கொள்முதல் விவரம் பின்வருமாறு:–



**அட்டவணை – 7**

| வ. எண். | வருடம் | நாளொன்றுக்கு சராசரி பால் கொள்முதல் (இலட்சம் லிட்டரில்) |
|---|---|---|
| 1 | 2010–2011 | 20.67 |
| 2 | 2011–2012 | 21.40 |
| 3 | 2012–2013 | 24.36 |
| 4 | 2013–2014 | 23.22 |
| 5 | 2014–2015 | 23.68 |
| 6 | 2015–2016 (31.07.2015 வரை) | 29.38 |






**அட்டவணை –8**

**மாவட்ட ஒன்றியம் வாரியாக பால்கொள்முதல் (நாளொன்றுக்கு சராசரி லிட்டர்)**


| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 (ஜூலை 2015 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 49,349 | 56,000 | 75,000 | 82,000 | 1,03,083 | 1,25,318 |
| 2 | விழுப்புரம் | 1,43,143 | 1,52,000 | 1,78,000 | 1,73,000 | 1,70,793 | 2,04,379 |
| 3 | வேலூர் | 2,45,417 | 2,52,000 | 2,97,000 | 2,81,000 | 2,84,965 | 3,11,732 |
| 4 | தர்மபுரி | 1,28,048 | 1,09,000 | 1,46,000 | 1,28,000 | 1,21,778 | 1,64,799 |
| 5 | சேலம் | 3,99,851 | 4,24,000 | 4,67,000 | 4,50,000 | 4,56,480 | 5,23,141 |
| 6 | ஈரோடு | 2,17,756 | 2,31,000 | 2,51,000 | 2,34,000 | 2,32,371 | 3,02,473 |
| 7 | கோயம்புத்தூர் | 2,25,894 | 2,30,000 | 2,40,000 | 2,34,000 | 2,18,175 | 2,82,724 |
| 8 | நீலகிரி | 18,668 | 17,000 | 18,000 | 16,000 | 15,045 | 16,764 |
| 9 | மதுரை | 1,74,351 | 1,68,000 | 1,93,000 | 1,76,000 | 1,93,988 | 2,78,496 |
| 10 | திண்டுக்கல் | 40,103 | 40,000 | 46,000 | 41,000 | 46,091 | 62,425 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 2,75,298 | 2,94,000 | 3,14,000 | 3,04,000 | 3,12,077 | 3,90,652 |
| 12 | தஞ்சாவூர் | 32,079 | 42,000 | 53,000 | 51,000 | 50,352 | 61,499 |
| 13 | புதுக்கோட்டை | 12,584 | 14,000 | 18,000 | 15,000 | 29,473 | 42,328 |
| 14 | சிவகங்கை | 28,225 | 33,000 | 44,000 | 47,000 | 49,040 | 58,800 |
| 15 | விருதுநகர் | 8,628 | 12,000 | 17,000 | 15,000 | 16,562 | 19,396 |
| 16 | திருநெல்வேலி | 61,996 | 58,000 | 69,000 | 67,000 | 58,798 | 82,007 |
| 17 | கன்னியாகுமரி | 5,390 | 9,000 | 10,000 | 8,000 | 9,250 | 10,630 |
| | **மொத்தம்** | **20,66,780** | **21,40,000** | **24,36,000** | **23,22,000** | **23,68,309** | **29,37,562** |



**அட்டவணை – 9**

**மாவட்ட ஒன்றியம் வாரியாக பால் விற்பனை**

| வ. எண். | ஒன்றியத்தின் பெயர் | நாளொன்றுக்கு சராசரி பால் விற்பனை லிட்டரில் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 697 | 7,560 | 6,103 | 6,161 | 9,987 |
| 2 | விழுப்புரம் | 35,092 | 30,086 | 26,435 | 24,718 | 22,982 |
| 3 | வேலூர் | 77,511 | 87,847 | 79,164 | 79,896 | 81,563 |
| 4 | தர்மபுரி | 18,811 | 21,690 | 20,888 | 25,060 | 27,806 |
| 5 | சேலம் | 1,56,356 | 1,76,854 | 1,75,746 | 1,86,777 | 1,88,094 |
| 6 | ஈரோடு | 72,408 | 79,371 | 72,483 | 71,867 | 72,533 |
| 7 | கோயம்புத்தூர் | 1,62,928 | 1,58,175 | 1,48,606 | 1,49,880 | 1,49,010 |
| 8 | நீலகிரி | 16,836 | 16,543 | 16,226 | 17,955 | 17,315 |
| 9 | மதுரை | 1,89,162 | 1,46,605 | 1,57,789 | 1,64,767 | 1,60,159 |
| 10 | திண்டுக்கல் | 13,938 | 15,155 | 13,668 | 14,756 | 13,707 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 1,12,151 | 1,11,284 | 1,12,991 | 1,20,382 | 1,18,974 |
| 12 | தஞ்சாவூர் | 18,581 | 19,529 | 18,766 | 20,556 | 22,329 |
| 13 | புதுக்கோட்டை | 6,932 | 6,830 | 6,819 | 8,336 | 10,941 |
| 14 | சிவகங்கை | 30,972 | 27,605 | 27,807 | 30,274 | 31,967 |
| 15 | விருதுநகர் | 6,132 | 10,623 | 8,768 | 7,378 | 6,012 |
| 16 | திருநெல்வேலி | 59,150 | 48,818 | 47,508 | 47,063 | 42,910 |
| 17 | கன்னியாகுமரி | 17,537 | 13,825 | 14,576 | 16,068 | 14,939 |
| | **மொத்தம்** | **9,79,708** | **9,78,400** | **9,54,343** | **9,91,894** | **9,91,228** |




**5.4. சமன்படுத்தும் பால்பண்ணை:-**
**(Feeder Balancing Dairies)**

தர்மபுரி, சேலம், ஈரோடு மற்றும் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சமன்படுத்தும் பால்பண்ணை இயங்கி வருகின்றது. திருவண்ணாமலையில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடன் ஒரு புதிய சமன்படுத்தும் பால்பண்ணை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.7.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இங்கு உபரியாக



கொள்முதல் செய்யப்படும் பால், பால் பவுடர் மற்றும் வெண்ணெய் போன்ற பொருட்களாக மாற்றப்படுகின்றன.

**அட்டவணை – 10**

| வ.எண் | சமன்படுத்தும் பால்பண்ணையின் பெயர் | கட்டுப்பாட்டில் செயல்படும் ஒன்றியம் / இணையம் | திறன் | |
|---|---|---|---|---|
| | | | பால்பண்ணையின் பால் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டர் | பால்பவுடர் தொழிற்சாலையின் உற்பத்தி திறன் (நாளொன்றுக்கு மெட்ரிக் டன்) |
| 1 | கிருஷ்ணகிரி | ஒன்றியம் | 2.00 | 10 |
| 2 | சேலம் | ஒன்றியம் | 3.00 | 10 |
| 3 | ஈரோடு | ஒன்றியம் | 3.00 | 40 |
| 4 | மதுரை | ஒன்றியம் | 3.00 | 10 |
| 5 | திருவண்ணாமலை | இணையம் | 2.00 | 20 |
| மொத்தம் | | | 13.00 | 90 |

**5.5. ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலை:-**

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் கால்நடை தீவன தொழிற்சாலை ஒன்று 1982ம் ஆண்டு முதல் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையம் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்டது. பல்வேறு வகையான தீவனங்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு மாவட்ட ஒன்றியங்கள்



மற்றும் கால்நடை பராமரிப்பு துறைக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில், ரூ.3.50 கோடி முதலீட்டில், மூலப்பொருள் மற்றும் கால்நடை தீவன சேமிப்பு கிடங்கின் கொள்ளளவு 3,350 மெட்ரிக் டன் அதிகரிக்கப்பட்டு தற்போது 6,000 மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது. இந்த தீவன ஆலையின் உற்பத்தி திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்னிலிருந்து 150 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க ரூ.10.72 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.6. தாது உப்புக் கலவை தொழிற்சாலை:-**

நான்கு தாது உப்புக்கலவை தொழிற்சாலைகள் விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் இயங்கி வருகின்றன. இவை ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

2014–15ஆம் ஆண்டில், கால்நடை பராமரிப்புத் துறையிடமிருந்து பெறப்பட்ட கேட்பு பட்டியலின்படி ரூ.161.56 இலட்சம் மதிப்பிற்கான தாது உப்பு கலவை ஆவின் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.



**6. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள்:-**

மாநிலத்தில் தற்போது கிராம அளவில் 11,839 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் மகளிரால் நடத்தப்படும் 1,793 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களும் அடங்கும். மேலும் நுகர்வோர் பயனடையும் வகையில் 62 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.


விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பால் ஆண்டு முழுவதும் தினசரி இருவேளைகளிலும் கொள்முதல் செய்யப்படுகிறது. உற்பத்தியாளர்களுக்கு பாலின் தரத்தின் அடிப்படையில் நியாயமான விலை வழங்கப்படுகிறது. தற்போது பசும் பால் மற்றும் எருமை பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு முறையே ரூ.28/– மற்றும் ரூ.35/– வழங்கப்படுகின்றது. மேலும், பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் பால் ஊற்றும் 4.56 இலட்சம் உறுப்பினர்களுக்கு சங்கம் இலாபம் ஈட்டும் போது பங்கு மூலதன ஈவுத்தொகை, ஊக்கத்தொகை மற்றும் கூடுதல் கொள்முதல் விலை ஆகியன வழங்கப்படுகின்றது.

2014–15ஆம் ஆண்டில் 842 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

**அட்டவணை –11**

**2010 –11 முதல் பதிவு செய்யப்பட்ட புதிய சங்கங்களின் எண்ணிக்கை:–**

| வ. எண். | ஆண்டு | புதிய சங்கங்களின் பதிவு எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2010–11 | 143 |
| **2** | **2011–12** | **867** |
| **3** | **2012–13** | **1,491** |
| **4** | **2013–14** | **977** |
| **5** | **2014–15** | **842** |
| **மொத்தம்** | **2011–15** | **4,177** |




கிராம அளவில், பால் கூட்டுறவு சங்கங்களால் நாளொன்றுக்கு ஏறத்தாழ 33 இலட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் நாளொன்றுக்கு



ஏறத்தாழ 3 இலட்சம் லிட்டர் வரை உள்ளூர் விற்பனை போக ஏறத்தாழ 30 இலட்சம் லிட்டர் வரை மாவட்ட ஒன்றியங்களால் கொள்முதல் செய்யப்படுகிறது.

**6.1. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்**

அ) கிராம அளவில், சங்கங்கள் உறுப்பினர் களிடமிருந்து தரத்தின் அடிப்படையில் அரசு நிர்ணயித்துள்ள விலையில் பால் கொள்முதல் செய்யப் பட்டு குறித்தகாலத்தில் பணம் பட்டுவாடா செய்யப் படுகிறது. பயிற்சி அளிக்கப்பட்ட சங்க பணியாளர்கள் மூலம் உறுப்பினர்களிடம் உள்ள கறவை மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகிறது. மேலும், உறுப்பினர்களுக்கு கால்நடை தீவனம் கிடைக்கவும் பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ வசதியை ஒன்றியத்தின் கால்நடை மருத்துவர்கள் மூலம் அளிக்கவும் சங்கம் ஏற்பாடு செய்கிறது.

1983ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 72ன் கீழ் சங்கம் ஈட்டும் நிகர இலாபத்தில் 50 சதவீதம் வரை உறுப்பினர்களுக்கு



போனஸ் வழங்கி வருவது பால் கூட்டுறவு அமைப்புகளின் சிறப்பு அம்சமாகும். இது தவிர சங்கம், கூட்டுறவு சங்கங்களின் விதி 83ன்கீழ் கூடுதல் கொள்முதல் விலையினை உறுப்பினர்களுக்கு அவர்கள் சங்கத்திற்கு அளிக்கும் பாலின் அளவிற்கு ஏற்ப வழங்குகிறது.

ஆ) பால் கொள்முதல் விலையை அரசு அவ்வப்பொழுது உயர்த்தியதன் மூலம் சங்கங்களின் பால் கொள்முதல் அதிகரித்ததால் சங்கங்களின் இலாபம் உயர்ந்துள்ளது. இத்தகைய இலாபத்தொகையானது உறுப்பினர்களுக்கு போனஸ் வழங்கவும், சங்கத்திற்குத் தேவையான தளவாடங்கள், உட்கட்டமைப்பினை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் சங்கங்களின் நிர்வாகச் செலவிற்கு லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் அனுமதிக்கப் பட்ட தொகையானது 1.11.2014 முதல் லிட்டர் ஒன்றுக்கு 75 பைசா ஆக உயர்த்தப்பட்டது.

இ) பால் உற்பத்தியாளர்களின் கறவை இனங்களுக்கு, ஒன்றியங்களின் கால்நடை மருத்துவர்கள் மற்றும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் பயிற்சி பெற்ற கிராம நிலைப் பணியாளர்கள் மூலம் அவர்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று



கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகிறது. 2014–15ஆம் ஆண்டில் 18.55 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் செயற்கை கருவூட்டல் பணிகள் மேற்கொள்வதற்காக 2014–15ஆம் ஆண்டில் ஒன்றியங்களின் நிதியிலிருந்து 1,000 கிட்டிகள் (Trevis) வழங்கப்பட்டுள்ளன.

ஈ) கால்நடை பராமரிப்புத் துறையின் ஒருங்கிணைப்புடன் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோமாரி நோய் தடுப்புத்திட்டத்தின் கீழ், 01.09.2014 முதல் 21.09.2014 முடிய 21 நாட்களுக்கு கால்நடை பராமரிப்புத்துறையுடன் இணைந்து தீவிர நடவடிக்கையாக கூட்டுறவு அமைப்பில் உள்ள 17 இலட்சத்திற்கும் கூடுதலான கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக விடுபட்ட கால்நடைகளுக்கும் மூன்று வாரத்திற்குள் தடுப்பூசிகள் போடப்பட்டன. மாவட்ட ஒன்றியங்களின் 160 கால்நடை மருத்துவர்கள் மற்றும் 2,600 கிராமநிலை பணியாளர்கள்

இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், 2014–15 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் சுற்று தடுப்பூசி 01.03.2015 முதல் 21.03.2015 முடிய 21 நாட்களுக்கு போடப்பட்டன. மேலும் விடுபட்ட கால்நடைகளுக்கும் 31.03.2015–க்குள் தடுப்பூசிகள் போடப்பட்டன.

உ) உபரி வருவாய் ஈட்டுகின்ற ஒன்றியங்கள் மூலம் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்கெனவே வாலாயமாக வழங்கிய பால் கொள்முதல் விலையுடன் கூடுதலாக ஊக்கத் தொகையும் வழங்கப்படுகின்றது. இதனால் உறுப்பினர்கள் சங்கத்திற்கு அதிகப்படியான பால் வழங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**6.2 தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்**

தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் பாக்கெட் பாலினை இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிடமிருந்து பெற்று, அரசு நிர்ணயித்த விலையில் பால் நுகர்வோர்களுக்கு வழங்குகிறது. இதனால் தரமான பால் நியாயமான விலையில் குறித்த காலத்தில் நுகர்வோர்களுக்கு விநியோகிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. மேலும்,



'ஆவின்' பால் பொருட்கள் விற்பனையையும் சங்கங்கள் மேற்கொள்கிறது.

**6.3 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களை வலுவான அமைப்பாக மேம்படுத்துதல்**

பால் கூட்டுறவு அமைப்பின் அடிப்படை அலகாகவும், சுமார் 22.95 இலட்சம் பால் உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாக கொண்டதாகவும் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை வலுவான அமைப்பாக மாற்றும் நோக்கில், துணைப்பால் ஆணையர் (கூட்டுறவு), துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) மற்றும் பொது மேலாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. இக்குழு பால் உற்பத்தியாளர்கள், தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள், மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஆகியோர் ஒன்றிய அளவில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகள் வழங்கியுள்ளது. இந்த பரிந்துரைகளை செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**7. திட்டங்கள்**

**7.1 தரமான மற்றும் தூய பால் உற்பத்திக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம்:–**
**(Strengthening Infrastructure for Quality and Clean Milk Production:- SIQ&CMP)**

இத்திட்டம் தமிழ்நாட்டில் 2004–05 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் குறிக்கோள் கிராமப்புற விவசாயிகளுக்கு தூய பால் உற்பத்தி குறித்த பயிற்சி அளித்தல், பால் உற்பத்தியாளர்களுக்கு தேவையான நுண்மத்தடை திரவங்கள், பாத்திரங்கள் அளித்தல், ஒன்றியங்களிலுள்ள பால்பண்ணைகள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களிலுள்ள பால் பரிசோதனை கூடங்களை மேம்படுத்துதல், பாலின் ஆரம்ப நிலை தரத்தை அதிகரிக்க தேவைப்படும் மொத்த பால் குளிர்விப்பான்களை கிராம அளவில் நிறுவுதல் ஆகும். 2012–13 திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி முந்தைய நிதியாண்டில் ரூபாய் ஒரு கோடிக்கும் மேல் திரட்டு இலாபம் ஈட்டிய ஒன்றியங்களுக்கு அனைத்து இனங்களுக்கும் 75 சதவீதம் மானியமும், மீதமுள்ள



ஒன்றியங்களுக்கு 100 சதவீதம் மானியமும் இத்திட்டத்தின் வாயிலாக வழங்கப்படுகிறது.

இதுவரை விழுப்புரம், தருமபுரி, சேலம், காஞ்சிபுரம்-திருவள்ளூர், ஈரோடு (இரு முறை), நீலகிரி, மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருநெல்வேலி, சிவகங்கை, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய ஒன்றியங்களில் 14 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 11 திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன. 3 திட்டங்கள் அதாவது திருச்சிராப்பள்ளி–வேலூர், திருநெல்வேலி-சிவகங்கை மற்றும் ஈரோடு ஒன்றியங்களில் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. இதில் முக்கியமான பணியான மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவும் பணி முழுமையடைந்துள்ளது. தூய பால் உற்பத்தி குறித்த பயிற்சி, நுண்மத்தடை திரவம் (antiseptic chemicals) மற்றும் பாத்திரங்கள் வழங்குதல் போன்ற பணிகள் செயல்பாட்டில் உள்ளன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.2,842.21 இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தின் வாயிலாக இதுவரை 84,410 பால் உற்பத்தியாளர்களுக்கு தூய பால் உற்பத்தி குறித்த பயிற்சி, நுண்மத்தடை திரவங்கள், பாத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளது. 13 மாவட்ட ஒன்றியங்களின் பல்வேறு

இடங்களில் 155 பால் குளிர்விப்பான்கள் நிறுவப் பட்டுள்ளன.

**அட்டவணை – 12**
**இந்த மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்படும் 5 ஒன்றியங்களின் செயலாக்க விவரம் பின்வருமாறு:-**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | ஒதுக்கீடு | விடுவித்தது | விடுவிக்க வேண்டியது* | செலவு |
|---|---|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி | 277.56 | 277.56 | – | 236.19** |
| 2 | வேலூர் | 172.44 | 172.44 | – | 172.44 |
| 3 | சிவகங்கை | 64.37 | 64.37 | – | 64.37 |
| 4 | திருநெல்வேலி | 156.07 | 156.07 | – | 156.07 |
| 5 | ஈரோடு | 499.94 | 327.91 | 172.03 | 327.91 |

* *மத்திய அரசு ஈரோடு ஒன்றியத்திற்கு விடுவிக்க வேண்டிய தொகை*

** தமிழ்நாடு அரசு திருச்சி மாகூபாஉஒ விடுவிக்க வேண்டிய தொகை ரூ.41.37இலட்சம்.

### 7.2 தீவிர பால்பெருக்கத்திட்டம்:- (Intensive Dairy Development Programme -IDDP):-

இத்திட்டத்தின் நோக்கம் மாவட்டங்களில் பால் கொள்முதலை அதிகரித்தல், பால் விற்பனையை உயர்த்துதல், பால் விற்பனை மற்றும் பால் பதப்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், இடுபொருட்கள் வழங்குதல் மற்றும் மனித வளத்தை மேம்படுத்துதல் ஆகும்.



முழுநிதியும் ஐந்தாண்டு காலத்திற்கு 100 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டம் ரூ.17.80 கோடி மானியத்தில் ஏழு வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய நான்கு மாவட்ட ஒன்றியங்களில் செயலாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 1,04,347 பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**அட்டவணை – 13**

**திட்ட செயலாக்கத்தின் முன்னேற்றம்:–**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | ஒதுக்கீடு | விடுவித்தது | * விடுவிக்க வேண்டிய தொகை | செலவு |
|---|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை | 312.150 | 312.150 | 0 | 312.150 |
| 2 | தஞ்சாவூர் | 867.624 | 867.624 | 0 | 867.624 |
| 3 | புதுக்கோட்டை | 299.260 | 240.605 | 59.055 | 240.055 |
| 4 | விருதுநகர் | 299.999 | 239.585 | 60.414 | 239.585 |

* *மத்திய அரசு விடுவிக்க வேண்டிய தொகை*

இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் சில முக்கிய பணிகள்:-

- புதுக்கோட்டை ஒன்றியத்தின் செயலற்ற குளிரூட்டும் நிலையத்தை, நாளொன்றுக்கு



35,000 லிட்டர் திறன் கொண்ட பால்பண்ணையாக மாற்றுதல்

- தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஒன்றியங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் செய்தல்
- ஸ்ரீவில்லிபுத்தூர் பால்பண்ணையில் தற்போதைய சிப்பத் திறனை நாளொன்றுக்கு 4,000 லிட்டரிலிருந்து 5,000 லிட்டராக உயர்த்துதல்
- காரைக்குடி பால்பண்ணையில் குளிர்பதன கிடங்கின் சேமிப்பு வசதியை 4000 லிட்டரிலிருந்து 15,000 லிட்டராக அதிகப்படுத்துதல்.

### 7.3 கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்புத் திட்டம்:- (Assistance to Cooperatives – Rehabilitation of unions -ACS)

“கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்பு’’ என்னும் இத்திட்டம் நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களை புனரமைப்பதற்காக செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கம், ஒன்றியங்களுக்கு ஏற்படும் பண நட்டத்தை முழுமையாக நீக்கி ஏழு ஆண்டுகளுக்குள் நிதி நிலைமையை மேம்படுத்தி



சரிசெய்து கொள்வதற்காக மத்திய–மாநில அரசுகள் தலா 50 விழுக்காடு தொகையை மானியமாகவும் வழங்குவதாகும். இத்திட்டத்தில் பெறப்படும் நிதியின் பெரும்பகுதி நிலுவையிலுள்ள பால் உற்பத்தியாளர் களுக்கான பண பட்டுவாடாவிற்கு செலவிடப்படுகிறது.

இத்திட்டம் ஆறு வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய மூன்று மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயல்படுத்தப் படுகிறது.

**அட்டவணை –14**

| வ. எண் | ஒன்றியம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஒதுக்கீடு | விடு வித்தது | மீதமுள்ள* தொகை | | செலவு |
| | | | | மாநில அரசு | மத்திய அரசு | |
| 1 | திண்டுக்கல் | 133.00 | 133.00 | 0 | 0 | 133.00 |
| 2 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 387.90 | 190.18 | 98.86 | 98.86 | 190.18 |
| 3 | தஞ்சாவூர் | 760.00 | 435.86 | 262.07 | 62.07 | 435.86 |
| | **மொத்தம்** | 1,280.90 | 759.04 | 360.93 | 160.93 | **759.04** |

*மீதமுள்ள தொகை ரூ160.93 இலட்சம் மற்றும் அதற்கு இணையான தொகையாக ரூ.360.93 இலட்சம் முறையே மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறப்பட வேண்டும்.

### 7.4 தேசிய கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பால்வள மேம்பாட்டுத்திட்டம்:- (National Programme for Bovine Breeding and Dairy Development):-

2014–15 ஆம் ஆண்டு முதல், தனித்தனியாக செயல்படுத்தப்பட்டு வந்த தீவிர பால் பெருக்கத் திட்டம், தரமான மற்றும் தூய பால் உற்பத்திக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம் மற்றும் ''கூட்டுறவுகளுக்கு உதவுதல்–புனரமைப்பு திட்டம்''ஆகியவை ஒன்றிணைக்கப் பட்டு, தேசிய கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பால்வள மேம்பாட்டுத் திட்டம் என செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், 2014–15 ஆம் ஆண்டிற்கு முன்பு அனுமதிக்கப் பட்ட இவ்விரு திட்டங்கள் முடியும் வரை தொடர்ந்து நடைபெறும்.

தேசிய கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPBBDD) குறிக்கோள்கள் பின்வருமாறு:–

அ) தரமான பால் உற்பத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு



ஆ) பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் பாலை விற்பனை செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல்.

இ) பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி

ஈ) கிராமபுற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துதல்

உ) பால் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் கால்நடைத் தீவனம், தாது உப்புக் கலவை மற்றும் பல.

ஊ) நலிவடைந்த ஒன்றியங்களை புனரமைத்தல்

மத்திய அரசு தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NPDD) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், திருச்சி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.4,015.79 இலட்சம் அனுமதித்துள்ளது. இதில் மத்திய அரசின் பங்களிப்பு ரூ.1,808.125 இலட்சம் மற்றும் திட்டம் செயல்படுத்தப்படும் முகமையின் பங்களிப்பு ரூ.2,207.665 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் காலம் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் ஆகும்.



மத்திய அரசு முதலாம் ஆண்டு (2014–15) மானியமாக ரூ.1,268.925 இலட்சம் விடுவித்துள்ளது. இதில் இணையத்திற்கு ரூ.372.50 இலட்சமும், திருச்சி ஒன்றியத்திற்கு ரூ..638.925 இலட்சமும் மற்றும் மதுரை ஒன்றியத்திற்கு ரூ.257.50 இலட்சமும் விடுவித்துள்ளது.

**இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கியமான பணிகள் பின்வருமாறு:–**

**<u>தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், சென்னை</u>**

1. குளிரூட்டப்பட்ட வாகன பெட்டகம்– 2 எண்ணிக்கை (Refrigerated puff insulated container vehicle-2 nos.)
2. பால் பை தொட்டியை சுத்தம் செய்யும் இயந்திரம் – 2 எண்ணிக்கை
3. கழிவு நீரை சுத்திகரிக்கும் பிரிவு – விரிவாக்கும் பணிகள்
4. 9,000 – 10 எண்ணிக்கை மற்றும் 15,000 – 5 எண்ணிக்கை கொள்ளளவு கொண்ட பால் டேங்கர்கள் கொள்முதல்
5. ஆய்வுக்கூடங்களுக்கான சாதனங்கள் கொள்முதல்.



**மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்**

1) நாளொன்றுக்கு 10,000 லிட்டர் திறன் கொண்ட தயிர் தயாரிக்கும் பிரிவு
2) 3000 லிட்டர் திறன் கொண்ட தானியங்கி சுத்தப்படுத்தும் அமைப்பு, கொழுப்பு நீக்கும் இயந்திரம் (Cream separator), பாலில் உள்ள நீரை ஆவியாக்கும் இயந்திர நிலையம் (Milk condensing Plant) மற்றும் கொதிகலன்கள் கொள்முதல்
3) பயிற்சி கூடத்தினை புத்தாக்கம் செய்தல்
4) புல் நறுக்கும் கருவி (Chaff cutter) – 100 எண்ணிக்கை
5) பசும்புல் தீவன விதைப்பை (Fodder Minikits) – 300 ஏக்கர்
6) 7 டன் கொள்ளளவு கொண்ட கால்நடை தீவன போக்குவரத்து வாகனம் –1 எண்ணிக்கை
7) கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி – 450 உறுப்பினர்கள்

**திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்**

1) நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால்பதப்படுத்தும் புதிய பால்பண்ணை, 50,000 லிட்டர் சேமிப்பு திறன் கொண்ட பால் குளிர்விக்கும் அறை மற்றும் 50 மெ.டன் வெண்ணெய் ஆழ்ந்த உறைகிடங்கு அமைத்தல்
2) பால் கூட்டுறவு சங்கத்திற்கான கட்டிடம் கட்டுதல்
3) பால் குவளைகள் – 1500 எண்ணிக்கை
4) புல் நறுக்கும் கருவி (Chaff cutter) – 50 எண்ணிக்கை
5) பசும்புல் தீவன விதைப்பை (Fodder Minikits) – 500 ஏக்கர்
6) கால்நடை தீவன சேமிப்பு கிடங்கு
7) கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி – 450 உறுப்பினர்கள்
8) மேலாண்மைகுழு உறுப்பினர்கள் மற்றும் ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி – 70 நபர்கள்



**7.5 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்:- (National Agriculture Development Programme-NADP):-**

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2007–08 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் துணை திட்டமாக தேசிய புரத சத்து வழங்கும் திட்டம் (National Mission for Protein Supplement) 2011 முதல் செயல்படுத்தப்படுகிறது. இந்த தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய புரத சத்து வழங்கும் திட்டம் மூலம் பால்வளத்துறைக்கு, 2011–12 முதல் 2014–15 வரை ரூ.131.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்துறையின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. கால்நடைகளின் நலன் பேணுதல், பால் உற்பத்தியை அதிகரித்தல், பால் கொள்முதலுக்கான உட்கட்டமைப்புகளான பதப்படுத்துதல், குளிர்பதன கிடங்குகள் மேம்படுத்துதல், மற்றும் விற்பனையை மேம்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தில் அடங்கும். கடந்த நான்கு ஆண்டுகளாக கீழ்க்கண்ட முக்கியமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



- காக்களூரில், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் திறன் கொண்ட பால்பண்ணை விரிவாக்கம்.
- 155 நடமாடும் அலகுகள் மூலம் பால் உற்பத்தியாளர்களின் இருப்பிடங்களிலேயே கால்நடை மருத்துவ சேவை.
- தர்மபுரி, வேலூர், சேலம், ஈரோடு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை திண்டுக்கல், புதுக்கோட்டை, காஞ்சிபுரம்–திருவள்ளூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஒன்றியங்களின் உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு
- 20 மொத்த பால்குளிர்விப்பான்கள் (Bulk Milk Coolers) நிறுவுதல்.
- இரண்டு குளிர்பதன வசதி உள்ள வாகனங்கள் (Refrigerated Van) மற்றும் மூன்று வெப்பம் கடத்தா வாகனங்கள் (Insulated van) வாங்குதல்.
- கூடுதலாக மூன்று இலட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் வசதி கொண்ட அறை மற்றும் 894 மெட்ரிக் டன் கொள்ளளவில் வெண்ணெய் உறை கிடங்கு அமைத்தல்.




- 3,000 புதிய தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல்.
- 11 புதிய பால் பைகள் நிரப்பும் இயந்திரங்கள் நிறுவியதால் சிப்பம் கட்டும் திறன் கூடுதலாக உயர்வு.
- ஈரோடு பால் பண்ணையில் கொழுப்பற்ற பால் பவுடர் உற்பத்தி தரத்தை நிலைநிறுத்த மூன்றாவது நிலை பால் பவுடர் உலர வைப்பானை புதுப்பித்தல்.
- ஈரோடு பால்பண்ணையில், சில்லரை விற்பனைக் கான 100, 200 மற்றும் 500 கிராம் அளவில் வெண்ணையை சிப்பம் செய்ய இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களை நிறுவுதல்.
- அம்பத்தூர் பால்பண்ணையில் நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும் 1,000 கிலோ பனீர் தயாரிக்கும் திறன் கொண்ட உற்பத்தி வசதி.
- சேலம் பால் பண்ணையில் உயர் வெப்ப நிலையில் (UHT) பலவகையான பால் சிப்பம் (Tetra Pack)கட்டும் வசதி

மேலும் இத்திட்டத்தின் கீழ், 2015-16 ஆம் ஆண்டில் மாநில அளவிலான வழிகாட்டும் குழுவால் ஒப்புதல்

அளிக்கப்பட்டு ரூ.25.35 கோடி செலவில் பால் உற்பத்தியாளர் இருப்பிடங்களிலேயே கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளித்தல் மற்றும் பால் வண்டிகள் வாங்குதல், காஞ்சிபுரம்–திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் காக்களூர் பால்பண்ணையில் பதப்படுத்துதல், குளிரூட்டுதல் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்துவது, தருமபுரி, நீலகிரி, புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் ஈரோடு கால்நடை தீவன ஆலையின் உற்பத்தி திறனை அதிகரிக்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது போன்றவற்றிற்கான திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப் பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முதலீடு**:-






### 7.6 நபார்டு நிதி உதவித்திட்டம் (Scheme under financial assistance of NABARD)

2014–15ஆம் ஆண்டில்,, நபார்டு நிதி உதவியுடன் ரூ.5,549.64 இலட்சம் மதிப்பீட்டில் பால்வள மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள அரசின் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இந்த திட்டங்களுக்கான மொத்த தொகை ரூ.5,549.64ல், நபார்டு நிதியுதவி ரூ.5,167.16 இலட்சம் மற்றும் மாநில நிதியுதவி ரூ.382.48 இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் ரூ.3,576.90 இலட்சம் செலவில் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், விழுப்புரம், வேலூர்–திருவண்ணாமலை ஒன்றியங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

1) சேலம் ஒன்றியத்தில் உள்ள பால்பண்ணையில் கூடுதலாக பால் கையாளும் வகையில் கொள்கலன்கள் (Milk Silo) அதனைச் சார்ந்த அளவு குறியீடு, பாலை குளிர்விக்கும் தளவாடங்கள் (Milk chiller), நுகர்வோர்களுக்கு பால் சிப்பத்தில் உள்ள விபரம் தெளிவாக அறிய வெப்பம் சார்ந்த எழுத்து அச்சுப்பொறி (Thermal



Printing) தானியங்கி பெட் பாட்டில் நெய் நிரப்பும் இயந்திரம், இரட்டை அடுப்பு கொண்ட 2 டன் கொதிகலன் மற்றும் அதன் செயலாக்கம் அறிய தேவையான ஸ்டெக் அனலைசர் (Stack Analyzer), கழிவு நீரை சுத்திகரிக்கும் பிரிவின் செயலாக்கத்தினை மேம்படுத்த பயோ கேஸ் டைஜெஸ்டர் மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்க ஜெனரேட்டர் வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு நாளொன்றுக்கு 5,000 லிட்டர் சூரிய ஒளி மூலம் சுடுநீர் தயாரிக்கும் வசதியும் ஏற்படுத்தப்படும்.

2) ஈரோடு ஒன்றியத்தில் உள்ள பால்பண்ணையில் கூடுதலாக பால் கையாளும் வகையில் ஒரு மணி நேரத்திற்கு 20,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் இயந்திரம் (Milk Pasteurizer), கொழுப்பு நீக்கும் இயந்திரம் (Cream Separator) மற்றும் அதி வேகத்துடன் இயங்கும் நவீன பால் பை இயந்திரம், பால் டப்புகளை சுத்தம் செய்யும் இயந்திரம், சூரிய ஒளி மூலம் சுடுநீர் தயாரிக்கும் வசதி மற்றும்



மின்சாரம் சேமிப்புடன் கூடிய மோட்டார் மற்றும் பம்பு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது.

3) கோயம்புத்தூர் ஒன்றியத்தில் உள்ள பால்பண்ணையில் பால் கையாளும் திறனை நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் ஆக உயர்த்தி தானியங்கி முறையில் செயல்படுத்த தேவையான பாலை பதப்படுத்தும் இயந்திரம், கொழுப்பு நீக்கும் இயந்திரம் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் நிறுவ தேவையான தொகையில் ஒரு பகுதி இத்திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப் படும்.

4) விழுப்புரம் ஒன்றியத்தில் உள்ள பால்பண்ணையில் பால் கேன்களை சுத்தம் செய்யும் இயந்திரம், பாலை பதப்படுத்தும் இயந்திரம், கொழுப்பு நீக்கும் இயந்திரம், பால் கொள்கலன், பால் பை தொட்டிகளை சுத்தம் செய்யும் இயந்திரம், தானியங்கி சுத்தம் செய்யும் அமைப்பு, குளிர்சாதன வசதி தளவாடங்கள், தடையில்லா மின்சாரம் வழங்க ஜெனரேட்டர் மற்றும் கொதிகலன், புகைகூண்டு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்படும்.

மேலும், பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு சுற்றுச் சுவர், சாலை மற்றும் தரை ஆகிய பணிகள் மற்றும் குளிர்சாதன தளவாடங்கள், சின்னசேலம் குளிரூட்டும் நிலையத்தில் கணினியுடன் கூடிய மின்னணு எடைமேடை, பால் குவளைகளை சுத்தம் செய்யும் இயந்திர வசதி ஏற்படுத்தப்படும்.

5) வேலூர் ஒன்றியத்தில் உள்ள பால்பண்ணையில் புதிதாக நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் சிப்பம் கட்டுவதற்கு தேவையான சிப்பம் கட்டும் இயந்திரங்கள் மற்றும் அதற்குத் தேவையான கட்டிட வசதி, கிடைமட்ட பால் சேமிப்பு கலன், பாலை குளிர்விக்கும் தளவாடம் மற்றும் பால் டப்புகள் சுத்தம் செய்யும் வசதிகள் ஏற்படுத்தப் படும்.

மேலும், இத்திட்டத்தின்கீழ் திருவண்ணாமலை பால் பவுடர் தொழிற்சாலையின் நீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் சாத்தனூர் அணையிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் (TWAD) மூலம் நாளொன்றுக்கு சுமார் 5.50 இலட்சம் லிட்டர் நீர் பெறும் திட்டமும் மற்றும்



ரூ.1072.74 இலட்சம் மதிப்பீட்டில் ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்னிலிருந்து 150 மெட்ரிக் டன்னாக உயர்த்திடும் திட்டமும் எடுத்து கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் 2015–16 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இனங்களுக்கான ரூ.90.17 கோடி கோரி திட்ட முன்மொழிவு தமிழக அரசு மூலம் நபார்டுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

- அம்பத்தூர் பால் பொருட்கள் தொழிற்சாலையில் நொதியூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் வசதிகளை உயர்த்துதல்
- சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் நீண்ட காலம் கெடாதிருக்கும் பால் சிப்பம் கட்டும் பிரிவை ஏற்படுத்துதல்
- ஈரோடு தீவன தொழிற்சாலையில் தீவன உற்பத்தியை அதிகரிக்க தேவையான கருவிகள் அமைத்தல்
- ஈரோடு, தருமபுரி மற்றும் விருதுநகர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய ஊரக பகுதிகளில் மொத்த பால் குளிர்விப்பான்கள்



நிறுவுவதன் மூலம் நாளொன்றுக்கு 2.1 இலட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் திறன் ஏற்படுத்துவதுடன் பதப்படுத்தும் திறனை வலுப்படுத்தி, கொழுப்பை கையாளும் வசதிகள் ஏற்படுத்துதல்

- மதுரை, திருச்சி, கோவை மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் திருவண்ணாமலை பால்பவுடர் தொழிற் சாலையில் வெண்ணெய் மற்றும் பால் பவுடர் இருப்பு வைக்கும் அறையின் அளவை அதிகரித்தல்
- திருநெல்வேலி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம்–திருவள்ளூர், தருமபுரி, நீலகிரி, புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்ட ஒன்றியங்களின் பதப்படுத்தல், குளிர்விக்கும் அறையின் சேமிப்பு திறன், சிப்பம் கட்டுதல், குளிரூட்டும் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

### 7.7 பகுதி - II திட்டங்கள்: 2014-15

2014–15 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக ரூ.2.75 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.



- சேலம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் இணைக்கப்பட்டுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.45.74 இலட்சம் மதிப்பீட்டில் 76 பகுப்பாய்வு கருவிகள் (Milk Analyzers) வழங்கப்பட்டுள்ளது.
- பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.20.00 இலட்சம் (சங்கத்தின் சொந்த பங்களிப்பு ரூ.10.00 இலட்சம், திட்ட ஒதுக்கீடு ரூ.10.00 இலட்சம்) மதிப்பீட்டில் 500 துருவுறா பால்கேன்கள் வழங்கப் பட்டுள்ளது.
- பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அலுவலகத்திற்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு மடிக்கணினிகள் வாங்கப் பட்டுள்ளது.
- மாதவரம் பால்பண்ணை வளாகத்திலுள்ள பழத் தோட்டத்திற்கு ரூ.30.76 இலட்சம் செலவில் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்டு வருகிறது.
- பால்வளத்துறை ஆணையர் அலுவலகத்தில் செயல் பட்டு வரும் பால் பற்றும் பால் பொருட்கள் ஆணையின்

தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கு 20 KVA தடையில்லா மின்சாரம் அளிக்கும் சாதனம் (UPS) ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

- துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களுக்கு கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மாற்றாக ரூ.19.50 இலட்சம் செலவில் மூன்று புதிய வாகனங்கள் (சீருந்து) வழங்கப்பட்டுள்ளது.
- மாதவரம் பால்பண்ணையில் உள்ள பழத்தோட்ட பகுதியில் ரூ.5.00 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்பு குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளது.
- பசுமை பண்ணை முனைப்பு

அ) சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் இரண்டு சூரிய ஒளி செறிவூட்டி கருவிகள் மூலம் பெறப்படும் சூரிய ஒளி வெப்ப சக்தி கொண்டு பால் பதப்படுத்துதல் ரூ.100.00 இலட்சம் செலவில் நிறுவப்பட உள்ளது.

ஆ) மொத்த பால் குளிர்விப்பான்களுக்கு 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட 50 சூரிய ஒளி கொதி கலன்கள் ரூ.57.50 இலட்சம் செலவில் நிறுவப்பட உள்ளது.



**7.8 தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம்**:-
**(National Mission on Food Processing – NMFP):-**

திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை ஆகிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களிலும், அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர் பெருநகர பால் பண்ணைகளிலும் குளிர்சாதன வசதி மற்றும் குளிர்பதன கிடங்கு உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக இத்திட்டத்தின் கீழ் ரூ.18.42 கோடி நிதி அனுமதிக்கப் பட்டது. இந்நிதி ஒதுக்கீட்டில், ரூ.8.70 கோடி மானியமாகவும் மீதமுள்ள ரூ.9.72 கோடி ஒன்றியங்களின் / இணையத்தின் சுய நிதியும் ஆகும்.

மேற்படி திட்டத்தில், திருச்சி , சேலம், மாதவரம் ஆகிய இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும், அம்பத்தூர், சோழிங்கநல்லூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கட்டிடப்பணி, இயந்திர தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கான கொள்முதல் ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் டிசம்பர் 2015க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இத்திட்டம் நிறைவடையும் பொழுது மாநகர பால்பண்ணைகளின் குளிர்பதன வசதி 3 இலட்சம் லிட்டர் கூடுதலாக உயரும். மேலும் ஒன்றியங்களில் குளிர்பதன வசதி 3.80 இலட்சம் லிட்டர் கூடுதலாகும் மற்றும் வெண்ணெய் உறை கிடங்கு வசதி 100 மெட்ரிக் டன் கூடுதலாகும்.

**7.9 ஒருங்கிணைந்த கூட்டுறவு பால் பெருக்கத் திட்டம்**:-
**(Integrated Cooperative Development Project -ICDP):-**

இத்திட்டத்தின் மூலம் மதுரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் உட்கட்டமைப்பு வசதிகளான குளிர்பதன சாதனங்கள், பால் சமச்சீர்ப்படுத்தும் இயந்திரம், கொழுப்பு பதப்படுத்தும் இயந்திரம், கொழுப்பு சேமிப்பு கலன், பாலை பாக்கெட்டு செய்யும் அதிவேக இயந்திரம், ஜெனரேட்டர், அதிநவீன முறையில் அமைக்கப்பட்ட குளிர்பதன இயந்திரம் மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள குளிரூட்டும் நிலையத்தை நவீனமாக்குதல் போன்ற பணிகளுக்காக ரூ.514.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மதுரை பால்பண்ணையின் கையாளும் திறனை நாளொன்றுக்கு 3 இலட்சம்



லிட்டரிலிருந்து 5 இலட்சம் லிட்டராகவும், நாளொன்றுக்கு 10,000 லிட்டர் தயிர் உற்பத்தி செய்து சிப்பம் கட்டுதல் மற்றும் தற்போதுள்ள பால்பாக்கட் குளிர் சாதனஅறையை 200 மெட்ரிக் டன் வெண்ணெய் உறை கிடங்கு அறையாக மாற்றி அமைத்தல் ஆகியவை முக்கிய பணிகளாகும். இத்திட்டத்தின் கீழ் பால் பதப்படுத்தும் மற்றும் சமன் படுத்தும் இயந்திர தளவாடங்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் குளிர்சாதன வசதிக்கான இயந்திர தளவாடங்களுக்கான கொள்முதல் ஆணை வழங்கப்பட்டு தளவாடங்கள் நிறுவும் பணி முடிக்கப்பட்டு இவ்வாண்டு இறுதிக்குள் செயல் படுத்தப்படும்.

**7.10 சுயநிதி மூலம் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டம்**:-
**(Infrastructure Development with own fund):-**

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அதன் பால்பண்ணையில் ரூ.4.00 கோடி செலவில் ஒரு மணி நேரத்திற்கு 20,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் இயந்திரம் (Milk Pasteurizer), கொழுப்பு நீக்கும் இயந்திரம் (Cream Separator) மற்றும் பால் சமன்படுத்தும் இயந்திரம் (Homogenizer) மற்றும்

அதிவேகத்துடன் பால் பைகளில் பால் நிரப்பும் நவீன இயந்திரம் (Highspeed packing machine) ஆகிய இயந்திரங்களைக் கொண்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளது. இதைத் தவிர, இணையம் மற்றும் ஒன்றியங்கள் தங்கள் சுயநிதியிலிருந்து இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை ரூ.16.03 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தியுள்ளன.

### 8. சிறப்புத் திட்டங்கள்:- (Special Schemes)

#### 8.1 திருவண்ணாமலை பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை:- (Tiruvannamalai Dairy cum Powder Plant)

திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில், ரூ.65.00 கோடி செலவில் நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால்பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.07.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 95 விழுக்காடு நபார்டு வங்கி கடனாகவும், மீதமுள்ள ஐந்து விழுக்காடு அரசு மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆலையின் நீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு



சாத்தனூர் அணையிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 5.50 இலட்சம் லிட்டர் நீர் வழங்கும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் (TWAD) மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை மற்றும் அதற்கு நீர் வழங்குவதற்காக தனித்திட்டத்துடன் கூடிய செலவு மொத்தம் ரூ.72.60 கோடியாகும்.

#### 8.2 பெரம்பலூரில் புதிய பால்பண்ணை:- (New Dairy at Perambalur)

மாண்புமிகு தமிழக முதமைச்சர் அவர்கள் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் நலனை கருத்தில் கொண்டு பெரம்பலூரில் ஒரு புதிய பால்பண்ணை அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இதன்படி, நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்ட பால்பண்ணை ரூ.36.28 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு, திருச்சிராப்பள்ளி ஒன்றியத்திற்கு வட்டியில்லா கடனாக ரூ.18.14 கோடி வழங்கியுள்ளது. தேசிய பால்வள மேம்பாட்டுத்திட்டம் மூலம் ரூ.9.08 கோடியும், சொந்த நிதி



மூலம் ரூ.9.06 கோடியும் இத்திட்டத்திற்காக பயன்படுத்தப் படும். இந்த பால்பண்ணை பாடாலூர் (கிழக்கு) கிராமம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டத்தில் 23.62 ஏக்கரில் அமைக்கப்பட்டு வருகிறது. தேசிய பால்வள வாரியம் முழு ஒப்பந்த முறையில் இப்பணியை மேற் கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.07.2015 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அனைத்து பணியும் ஜூன் 2016க்குள் முடிக்கப்படும்.

#### 8.3 பால் பொருட்கள் தயாரிக்கும் பால்பண்ணை:- (Product Dairy)

சென்னை மாநகரின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, அம்பத்தூர் பால்பண்ணை வளாகத்தில் தற்போது இயங்கி வரும் பால் பொருட்கள் பண்ணையை விரிவாக்கம் செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டது. இப்புதிய வசதி நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும் 1000 கிலோ பனீர் தயாரிக்கவும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடான ரூ.23.46 கோடியில், ரூ.13.00 கோடி தேசிய புரதச்சத்து பெருக்க இயக்கத்தின்



வாயிலாகவும் (NMPS) மீதமுள்ள ரூ.10.46 கோடி இணையத்தின் சுயநிதியாகவும் பெறப்பட்டுள்ளன.

இணையத்தின் மூலமாக கட்டுமான பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. குளிர்பதனம், கொதிகலன் மற்றும் தண்ணீர் இணைப்பு தொடர்பான இயந்திர தளவாடங்கள் மற்றும் மின்சார பணி ஆகியவை தேசிய பால்வள வாரியம் மூலம் முழு ஒப்பந்த முறையில் நடைபெற்று வருகிறது. அனைத்து பணியும் அக்டோபர் 2015க்குள் நிறைவுறும்.

#### 8.4 புதுக்கோட்டை பால்பண்ணை:- (Pudukkottai Dairy)

தமிழகத்தில் புதுக்கோட்டை பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தவிர அனைத்து மாவட்ட ஒன்றியங்களிலும் தனித்தனியாக பால்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை ஒன்றியத்தில் பால் உற்பத்தி, கொள்முதல், விற்பனையை மேம்படுத்தி பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், நுகர்வோர்களுக்கு தரமான பால் விநியோகம் செய்யவும், ரூ.2.99 கோடி செலவில், சுமார் 3.50 ஏக்கர் நிலப்பரப்பில், 35,000 லிட்டர் கொள்திறனுடன் நவீன பால்பண்ணை தீவிர பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது.

இந்த பால்பண்ணை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.7.2014 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பால்பண்ணை நிறுவப் படுவதற்கு முன்பு 50 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வந்தன. 3 பால் சேகர வழித்தடங்கள் மூலம் சராசரியாக 12,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. பால்பண்ணை நிறுவப்பட்டு செயல்பட துவங்கிய பின்பு புதியதாக 240 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப் பட்டு தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு 42,000 லிட்டர் பால் 19 பால் சேகர தடங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வொன்றியம் மேற்கொண்ட தொடர் நடவடிக்கை களின் காரணமாக நாளொன்றுக்கு 6,841 லிட்டராக இருந்த பால் விற்பனை 12,000 லிட்டராக உயர்ந்துள்ளது.

பால்பண்ணை நிறுவப்பட்டதால் 12,000 பால் உற்பத்தியாளர்கள் நேரடியாக பயன்பெற்று வருகின்றனர். புதிய சங்கங்கள் உருவாக்கப்பட்டதால் 600 பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்ததுடன்



மாவட்ட ஒன்றியத்தில் கூடுதலாக 70 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. மேலும் பால் விற்பனையை அதிகரிக்க புதிய முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால் 300 நபர்கள் நேரடியாக வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

### 8.5 காக்களூர் பால்பண்ணை:- (Kakkalur Dairy)

2011 ஆம் ஆண்டு வரை நட்டத்தில் இயங்கி வந்த காஞ்சிபுரம்-திருவள்ளூர் ஒன்றியத்திற்கு புத்துயிர் அளிக்க ஏதுவாக காக்களூர் பால் குளிரூட்டும் நிலையத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் ரூபாய் 524.50 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அரசின் 100 சதவிகித மானியத்துடன் மேற்கொள்ளப்பட்டன.

இப்பால்பண்ணை புத்துயிர் பெற்றதன் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் முன்பு இயங்கி வந்த 462 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் தற்சமயம் 557 சங்கங்களாக அதிகரிக்கப்பட்டு, காக்களூர் பால் பண்ணையில் நாளொன்றுக்கு 1.42 இலட்சம் லிட்டர் பால் கொள்முதலும், 35,000 லிட்டர் பாக்கெட் பால் விற்பனையும் அதிகரித்துள்ளது. இதனால் 6500க்கும் கூடுதலான விவசாய குடும்பங்கள் பயன்பெற்று



வருகின்றன. மேலும், 290 நபர்கள் நேரிடையாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெற்றனர்.

### 8.6 கோயம்புத்தூர் பால்பண்ணை:- (Coimbatore Dairy)

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், பேரூர்செட்டிப்பாளையம் கிராமத்தில் 36 ஏக்கர் பரப்பளவில் நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் பால் கொள்ளளவுத் திறன் கொண்ட கோயம்புத்தூர் பால்பண்ணை, 1987 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

மாவட்டத்தின் பால் உற்பத்தித் திறனை கருத்தில்கொண்டு ஒன்றியத்தின் பால் பண்ணைகளின் பதப்படுத்தும் திறனை நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டராக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்திற்காக ரூ.46 கோடி செலவில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளாகிய பால்பதப் படுத்துதல், பால்கொள்கலன், சிப்பம் கட்டுதல், பால்பாக்கட் சேமிப்பு குளிர்பதனவசதி அறை, வெண்ணெய் உறை கிடங்கு மற்றும் பால் குளிர்விக்கும் குளிர்பதனவசதி ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டிடப் பணிகள் 90 சதவிகிதமும் இயந்திர தளவாடங்கள் நிறுவும் பணி 70 சதவிகிதமும்



முடிவடைந்துள்ளது. இத்திட்டம் 2015–ஆம் ஆண்டுக்குள் நிறைவேறும்.

### 8.7 ஒருங்கிணைந்த பால் பண்ணை மேலாண்மை அமைப்பு (Integrated Dairy Management System (IDMS))

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் செயல்பாடுகள் தகவல் தொழில் நுட்பம் மூலம் ஒருங்கிணைந்து செயல்பட, மத்திய அரசின் மின் ஆளுமை திட்டத்தின் கீழ் 100 சதவீத மானிய உதவியுடன் ரூ18.43 கோடி செலவில் "ஒருங்கிணைந்த பால் பண்ணை மேலாண்மை அமைப்பு" திட்டம் இரண்டு ஆண்டுகளில் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டம் சோதனை அடிப்படையில் முதல் கட்டமாக தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், நான்கு சமன்படுத்தும் பால் பண்ணைகள் அமைந்துள்ள சேலம், ஈரோடு, தருமபுரி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இந்த மாவட்ட ஒன்றியங்களின் 2800 கிராம கூட்டுறவு பால்

உற்பத்தியாளர்கள் சங்கங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த பிரைஸ் வாட்டர் கூப்பர் என்ற தனியார் ஆலோசனை நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. கணினி மென்பொருள் ஒருங்கிணைப்பாளர் தெரிவு செய்ய ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**8.8 தேசிய பால்வளத் திட்டம்–I :(National Dairy Plan-I -NDP):-**

உலக அளவில் இந்தியா பால் உற்பத்தியில் முதல் இடத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டுமெனில் கறவைகளின் பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் அவசியமாகும். இந்நோக்கத்தை அடைவதற்கு அதிக பால் உற்பத்தி மரபுத்திறன் உள்ள பொலி காளைகளை தேர்ந்தெடுப்பது இன்றியமையாததாகும். இதனை கருத்தில் கொண்டு உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய பால் பெருக்கத் திட்டம் – I ல் வம்சாவழி சோதனைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் கலப்பின ஜெர்சி பசுக்கள் உள்ளதால், இத்திட்டத்தை ரூ.39.28 கோடி



ஒதுக்கீட்டில் செயல்படுத்த தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

திட்டத்தின் கால அளவான 2012–13 முதல் 2017–18 வரையில் வேலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்ட ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பசுக்கள் மூலம், திறன் நிரூபணம் செய்யப்பட்ட காளைகளின் உறைவிந்து மூலம் கருவூட்டல் செய்து சிறந்த காளை கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் பிறந்த கிடாரி கன்றுகளின் செயல்பாடுகளைக் கொண்டு காளைகளின் தரம் வரிசைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முடிவில் தோராயமாக 247 பொலி காளைகள் எதிர்காலத்தில் விந்து உற்பத்திக்காக உற்பத்தி செய்யப்படும்.

**8.9 தேசிய கால்நடை இயக்கம் 2014–15 (National Livestock Mission-2014-15)**

கறவை பசுக்களின் பால் கறக்கும் மற்றும் இனப்பெருக்க திறனை மேம்படுத்தவும், சமச்சீர் தீவனம் அளிக்கும் முறைகளைப் பற்றியும் கறவை பசுக்களின் மேலாண்மை ஆகியவற்றின் மீது கறவை பசு இன



மேலாண்மை பயிற்சி, முன்னோடி பால் உற்பத்தியாளர்களுக்கு அளிப்பதன் மூலம் பால் உற்பத்தி அதிகரிப்பதோடு, பால் உற்பத்தியாளர்களுடைய வருவாய் அதிகரிக்கும். கறவை பசுக்களுக்கு கிடைக்கும் பசுந்தீவனத்தின் அளவு அதிகரித்து, பால் உற்பத்தி மற்றும் பாலின் தரத்தை மேம்படுத்தி, பால் உற்பத்தியாளர்களின் வருவாயை அதிகரிக்கச் செய்வதில் பசுந்தீவன அபிவிருத்தி முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நோக்கத்துடன், கீழ்க்காணும் திட்டங்கள் தேசிய கால்நடை இயக்கம் 2014–15ன் கீழ், செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அ) முன்னோடி விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி**

தேசிய கால்நடை இயக்கம் 2014–15 ன்கீழ், மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் முன்னோடி விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் கறவை இனங்கள் மேலாண்மை பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 7,500 பால் உற்பத்தியாளர்கள் பயன் அடைந்துள்ளனர். தேசிய பால்வளத்திட்டம்–1–ல் சமச்சீர் கால்நடை தீவன திட்டத்தின் கீழ் 7 ஒன்றியங்களில் பால் உற்பத்தியாளர் களுக்கு மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படவுள்ளதால்



மீதமுள்ள 10 ஒன்றியங்களில் இத்திட்டம் தேசிய கால்நடை இயக்கம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆ) தீவன விதைகள் கொள்முதல் மற்றும் விநியோகத் திட்டம்**

தீவன விதைகள் கொள்முதல் மற்றும் விநியோகத் திட்டத்தின் கீழ் ரூ.103.65 இலட்சம் மதிப்பீட்டில் 19,150 பால் உற்பத்தியாளர்கள் பயன் அடையும் வகையில் பசுந்தீவன வளர்ப்புக்காக 130.50 மெட்ரிக் டன் தீவன மக்காச்சோளம், தீவன சோளம் மற்றும் ஓட்ஸ் விதைகள் வழங்கப் பட்டுள்ளது.

**அட்டவணை– 15**


**(ரூ.இலட்சத்தில்)**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதி உதவி | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | தே.கா.இ.* உதவி | பயனாளியின் பங்கு | |
| 1 | முன்னோடி விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி | 37.5 | 0 | 37.5 |
| 2 | தீவன விதைகள் கொள்முதல் மற்றும் விநியோகம். | 77.74 | 25.91 | 103.65 |
| | **மொத்தம்** | **115.24** | **25.91** | **141.15** |

* தேசிய கால்நடை இயக்கம்

### 8.10 விற்பனை வருவாய் விபரம்:- (இணையம் மற்றும் ஒன்றியங்கள்) – (Sales Revenue - Federation and Unions)

2010-2011 ஆம் ஆண்டில் ரூ.2,369 கோடியாக இருந்த இணையம் மற்றும் ஒன்றியங்களின் விற்பனை வருவாய் அளவு 2014-15 ஆம் ஆண்டில் ரூ.3,881 கோடியாக உயர்ந்து விற்பனையில் சாதனை படைத்துள்ளது.




ஆவின் நிறுவனம் நுகர்வோர்களிடமிருந்து பெறும் பால் விற்பனை விலை தொகையிலிருந்து 80 சதவீதம் வரை பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலையாக வழங்கி வருகிறது.



### 9. வளர்ச்சிக்கான மும்முனை நடவடிக்கைகள்

பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் நலனுக்காக சேவை செய்ய வலிமையான மற்றும் ஆற்றல் மிகுந்த கூட்டுறவு அமைப்பினை மாநிலம் கொண்டிருப்பதை நோக்கமாகக் கொண்டு ஆவின் நிறுவனம் கீழ்க்காணும் மும்முனை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.


### 9.1. உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான முதலீடுகள்

பால்வளத்தின் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் இந்த அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.409/–கோடிக்கும் அதிகமான தொகையை கிராமச் சங்கங்கள், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் மாநில இணையத்தின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த முதலீடு செய்துள்ளது. இந்த முதலீடுகளின் மூலம் பால்பண்ணை குளிரூட்டும் திறன் நாள் ஒன்றிற்கு 6.43 இலட்சம் லிட்டரும், பதப்படுத்தும் திறன் நாள் ஒன்றிற்கு 5.15 இலட்சம் லிட்டரும் அதிகரித்துள்ளது. பால் குளிர்விக்கும் அறையின் சேமிப்பு திறன் 5.34 இலட்சம் லிட்டரும், பால் பொடி (Milk Powder) உற்பத்தித் திறன்




நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன்னும் மற்றும் வெண்ணெய் ஆழ்ந்த உறைகிடங்கின் கொள்ளளவு 1,030 மெட்ரிக் டன்னும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தின் 4.56 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் 17 இலட்சம் நுகர்வோர்கள் பயன் அடைகிறார்கள். இந்த உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் எதிர்காலத்தில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் கொள்முதல் நாளொன்றிற்கு 31 இலட்சம் லிட்டர் வரை அதிகரித்தாலும், அதனை கையாளக்கூடிய திறன் ஆவினுக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும், பால் நுகர்வோர்கள் கோருகின்ற அளவிற்கு தடையின்றி பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான முதலீடுகள்**







**உயர்த்தப்பட்ட திறன்**




**உயர்த்தப்பட்ட திறன்**



**9.2. பால் தர உத்திரவாத முனைப்பு**

நுகர்வோர்களுக்கு தரமான பால் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதற்காக பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய 3 நிலைகளிலும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

உறுப்பினர்கள் சங்கத்திற்கு வழங்குகின்ற பாலில் உள்ள கொழுப்பு மற்றும் இதர சத்துக்களின் அடிப் படையில் பால்கொள்முதல் செய்வதை ஊக்கமளிக்கும் வகையில் பால் பரிசோதனை கருவிகள் (Milk Analyzer) வழங்கப்படுகின்றன. இதன் மூலம் சங்கத்திற்கு பால் வழங்கும் உறுப்பினர்கள் பால் பரிசோதனை செய்யப் படுவதை நேரில் அறிந்துகொள்ளும் வகையில் இக்கருவியில் காட்சி தொகுப்பாக (display) காண்பிக்கப் படுகிறது. மேலும் உறுப்பினர்கள் சங்கத்திற்கு வழங்கும் பாலின் அளவு மற்றும் தரம் குறித்த அச்சிடப்பட்ட ரசீது வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் வழங்குகின்ற பால் ஒளிவுமறைவற்ற நிலையில் சோதனை செய்யப்படுவதை இது உறுதி செய்கிறது.



இதன் அடுத்த நிலையில், பால் பரிசோதனை கருவியில் பதிவு செய்யப்பட்ட பாலின் அளவு மற்றும் தரம் குறித்த விவரங்கள் இணையதளம் (Online) மூலம் தானாகவே ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இவ்விவரங்களின் அடிப்படையில், பால் மற்றும் பால் பொருட்களில் உள்ள மொத்த திடச்சத்து விடுதலின்றி கணக்கிடப்பட ஒருங்கிணைந்த பால் பண்ணை மேலாண்மை திட்டம் (Integrated Dairy Management System) சேலம், மதுரை, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியாளர் களுக்கு, பால் கொள்முதல் மின்னணு பகுப்பாய்வு மூலம் பெற்று, அளவு, தரம் மற்றும் விலை விவரங்கள் உடனடியாக குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். மேலும், பால் பணம் உடனுடக்குடன் பட்டுவாடா செய்ய வழிவகை செய்யப்படும். இம்முறையில் இணையதளம் மூலம் பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோர்கள் பெற வழிவகை ஏற்படும்.



இத்திட்டத்தின் பயனாக எதிர்காலத்தில் சங்கங்கள் அனுப்புகின்ற பாலில் உள்ள மொத்த சத்தின் அடிப்படையில் சங்கத்திற்கு கிடைக்கக்கூடிய தொகை யினை சங்கங்களே கணக்கிட்டு அறிந்து கொள்ள ஏதுவாகும். இவ்வகையில் உறுப்பினர்கள், சங்கம், ஒன்றியம் மற்றும் இணையம் ஆகிய அனைத்து நிலைகளிலும் ஒளிவுமறைவற்ற பரிவர்த்தனைகள் (Transactions) நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் குளிரூட்டும் நிலையங்களுக்கு பால் அனுப்புகின்ற பால் கேன்களில் நார் கயிற்றால் முத்திரை வைத்து அனுப்பி வந்தன. இம்முறையில் பால் அனுப்புவதில் உள்ள குறைகளை களையும் பொருட்டு ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய நைலான் சீல்கள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து சங்கங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒன்றியங்கள், இணையத்திற்கு பால் அனுப்புகின்ற பால் டேங்கரில் பிளாஸ்டிக் சீல்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. தற்போது இம்முறையை மாற்றி, எரிபொருள் எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் சுங்கத்துறையில்



நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எளிதில் உடைக்க முடியாத, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய மெட்டல் சீல் வைக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், குளிரூட்டும் நிலையம், பால்பண்ணை, மொத்த குளிர்விப்பான்கள் ஆகியவற்றிலிருந்து பால் அனுப்பப் படுகின்ற போது, பால் அளவு, தரம் ஆகியவற்றை சான்றொப்பமிட்டு அனுப்புவதற்கு ஒரே மாதிரியான படிவங்கள் நிர்ணயிக்கப்பட்டு பயன்படுத்தப் படுகின்றன.

மாவட்ட ஒன்றியங்களிலிருந்து சென்னை பால் பண்ணைகளுக்கு பால் கொண்டுவர பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களிலும் ஜிபிஎஸ் முறை (GPS-Global Positioning System) நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனை நிறுவுவதன் மூலம் வாகனங்கள் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் செல்வதை கண்காணிக்க இயலும். மேலும் உலோக முத்திரைகள் திறக்கப்பட்டாலோ அல்லது மோசடியாக மாறுதல் செய்ய முயற்சித்தாலோ அது குறித்த எச்சரிக்கை செய்திகளை வாகனத்தின் கதவில் வைக்கப்பட்டுள்ள உணரிகள் (sensor) அனுப்பும். இதன் மூலம் இணையம் மற்றும்

ஒன்றிய அலுவலர்கள் வாகன இயக்கத்தை எந்நேரத்திலும், எவ்விடத்தில் இருந்தும் கண்காணிக்க இயலும். இதன் மூலம் வாகனங்கள் தேவையின்றி இடை நிறுத்தம் செய்தல், முத்திரைகளைச் சேதப்படுத்துதல் போன்ற தவறான நடவடிக்கைகளை தடுக்க இயலும்.

மேலும், வாகனங்களின் இயக்கங்களை கண்காணிக்க இணைய அளவில் 4–ம் மற்றும் ஒன்றிய அளவில் 17–ம் மொத்தம் 21 திடீர் ஆய்வு குழுக்கள் அமைக்கப்பட்டு, அவ்வப்போது சோதனை மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் விற்பனைக்கு பால் அனுப்புகின்ற பொழுது 19 வகையான இயற்பியல், வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் (Physical, Chemical & Biological) சோதனைகள் செய்து பாலின் தரம் உறுதி செய்த பின்னரே விற்பனைக்கு அனுப்பி வைக்கப் படுகிறது.

பால் வளத்துறை ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் ஆய்வுக் கூட பணியாளர்கள் எதிர்பாரா விதமாக (Surprise) விற்பனை செய்யப்படும் இடத்திலிருந்து மாதிரி எடுத்து சோதனை



செய்கின்றார்கள். 2014–15 ஆம் ஆண்டில் மட்டும் பால் மற்றும் பால் பொருட்களின் 721 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு நுகர்வோர்களுக்கு தரமான பால் வழங்கப் படுவது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**9.3. பால் விற்பனை அதிகரிப்பு நடவடிக்கைகள்**

சென்னை பெருநகரில், தினசரி சராசரியாக 11.70 இலட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனை செய்யப்படுகிறது.. இந்த விற்பனை, இணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 781 பால் டெப்போக்கள் / விற்பனை முனையங்கள் மற்றும் 93 பாலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னை மாநகரில் பால் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர்களிடையே மிகவும் பிரபலமாக உள்ளது.

ஆவின் பால் விற்பனை விலை பிற நிறுவனங்களை விட குறைவாக உள்ளது. இதை தவிர, மாதாந்திர அட்டைதாரர்களுக்கு ஒரு லிட்டருக்கு ரூ.2.00 / ரூ.3.00 மேலும் குறைத்து வழங்கப்படுகிறது. நுகர்வோர்களின் விருப்பத்தேர்வுக்கு வழிவகை ஏற்படுத்தும் பொருட்டு 04.02.2015 முதல் 250 மில்லி



லிட்டர் பாக்கெட்டுகளில் ஆவின் பால் விற்பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை பெருநகரில், பால் விற்பனையை அதிகப்படுத்தும் வகையில் பால் விநியோக வழித்தடங்களின் எண்ணிக்கை 101 லிருந்து 117 ஆகவும், பால் வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கை 443 லிருந்து 470 ஆகவும் மற்றும் விநியோகிக்கும் இடங்கள் 263லிருந்து 311 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்து வரும் பாலகங்களின் எண்ணிக்கை 69லிருந்து 93 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் மொத்த பால் விநியோகிப்பாளர்கள் 47 லிருந்து 71 ஆகவும் புதிதாக ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள் 184லிருந்து 234 ஆகவும் அதிகரித்துள்ளனர். புதிதாக 14 மொத்த விற்பனையாளர்கள் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்ய நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆவின் நிறுவனம் கடந்த நான்கு ஆண்டுகளில் பல புதிய பால் பொருட்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 20.2.2013 அன்று நுகர்வோர்களுக்கு நட்டிஸ்



மற்றும் மில்கி என்ற இரு வகை ஆவின் சாக்லேட் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்துடன் ஏற்கெனவே உள்ள நறுமன வகைகளுடன், 7 புதிய வகை மில்க் ஷேக்குகள் அதாவது வெனிலா, ஆரஞ்சு வெனிலா, மால்ட் வெனிலா, ஆப்பிள், காரட், பனாணா மற்றும் பாதாம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. பால் பேடா, மேங்கோ மில்க்ஷேக், மில்க் பிரெட், மில்க் கேக் மற்றும் லாங் குல்பி ஆகியவை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பால் பொருட்களாகும்.

- இணையம் மற்றும் ஒன்றியங்களின் மூலமாக ஆவின் பால் பொருட்கள் நுகர்வோர்களின் வாழ்விடங்களுக்கு அருகில் கிடைக்கச் செய்யும் நோக்கத்தில் 182 புதிய ஆவின் பாலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் சென்னை பெருநகரில் ஆவின் பால் பொருட்கள் 3 வேன்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

**பால் பொருட்கள் விற்பனை:**

2010–11 ஆம் ஆண்டில் ஆண்டொன்றுக்கு ரூ.58.88 கோடி என்ற அளவில் இருந்த ஆவின் பால்

பொருட்கள் விற்பனை வருவாய், மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் பலனாக 2014-15 ல் ரூ.101.27 கோடி என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. இது 72 சதவீதம் உயர்வு ஆகும்.

சென்னை பெருநகரில் நாளுக்கு நாள் பெருகி வரும் ஆவின் பால் பொருட்களின் தேவையை பூர்த்தி செய்திடும் நோக்கிலும், விற்பனை இலக்காக ரூ.150 கோடியினை எட்டவும் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க மக்கள் ஏராளமாக கூடும் இடங்களில் பாலகங்கள் அமைத்தல்.
- விற்பனையை அதிகரிக்க நவீன மால்கள், சூப்பர் மார்க்கெட் மற்றும் பெரு நிறுவனங்களில் ஆவின் பாலகங்கள் அமைத்தல்.
- சமையல் ஒப்பந்ததாரர்கள் மற்றும் கேட்டரிங் சர்வீஸ் கம்பெனிகளின் மூலமாக திருமணம் மற்றும் இதர விழாக்களுக்கு ஆவின் பால் விற்பனை.



**10. பால் உற்பத்தியாளர்களுக்கான சிறப்பு சேவைகள்:-**

பால் உற்பத்தியாளர்களுக்கு சேவை செய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டு பால் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

**10.1 பால் கொள்முதல் விலை உயர்வு**:-

அரசு, பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, 01.11.2014 முதல் பசும் பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.23/–லிருந்து ரூ.28/– எனவும், எருமைப்பால் கொள்முதல் விலையை ரூ.31/– லிருந்து ரூ.35/– எனவும் உயர்த்தி வழங்கியுள்ளது. ஒரே சமயத்தில் உயர்த்தப்பட்ட அதிகபட்ச கொள்முதல் விலை இதுவேயாகும். இவ்வாறு கடந்த நான்கு ஆண்டுகளில் கொள்முதல் விலை பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.10/–ம் மற்றும் எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9/–ம் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு கொள்முதல் விலை கடந்த சில ஆண்டுகளில் உயர்த்தப் பட்டதன் காரணமாக பால் உற்பத்தியாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,100 கோடி கூடுதலாக வழங்கப் படுகிறது.



**10.2 மானிய விலையில் கால்நடைத் தீவனம், தாது உப்புக்கலவை வழங்குதல்**

பால் உற்பத்தியாளர்கள் கறவை இனங்களுக்கு தொடர்ந்து கால்நடை தீவனம் வழங்குவதை ஊக்கப் படுத்தும் விதமாக 10 மாவட்ட ஒன்றியங்கள், கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக்கலவை ஆகியவைகள் மானிய விலையில் ஒன்றியத்தின் நிதியினை பயன்படுத்தி வழங்குகின்றன. கால்நடை தீவனத்திற்கு கிலோ ஒன்றுக்கு ரூ.2/– முதல் ரூ.4/– வரையும் மற்றும் தாது உப்பு கலவை கிலோ ஒன்றுக்கு ரூ.25/– மானியமாக வழங்கப் பட்டு வருகிறது.

**10.3 திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி**

பால் உற்பத்தியாளர்கள் இடர்பாடுகளை சந்திக்கின்ற பொழுது அவர்களுக்கு உதவவும் அவர்களின் சங்கத்தின் மீதான விசுவாசத்தை அதிகரிக்கவும் ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. அந்த நிதி திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி என்று அழைக்கப்படுகிறது.



இந்நிதிக்கு, சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தங்களின் பங்களிப்பாக ஒரு பால் உற்பத்தியாளருக்கு தலா 50 பைசா வீதம் மாதம் ஒன்றுக்கு செலுத்துகின்றன. உற்பத்தியாளர் உறுப்பினர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.1/–வீதம் பால் பண பட்டுவாடாவிலிருந்து செலுத்துகின்றனர்.

இந்நலநிதியிலிருந்து முழுமையான நிதி உதவி பெற விபத்து ஏற்பட்ட நாளுக்கு முந்தைய நாளுடன் முடிந்த ஓராண்டு காலத்திற்குள் பால் ஊற்றும் உறுப்பினர் 120 லிட்டர் பால் 180 நாட்களுக்குள் வழங்கியிருக்க வேண்டும்.

**அட்டவணை–16**

**இந்நிதியிலிருந்து வழங்கப்படும் பணப்பலன்**


| வ. எண் | நிதி உதவி | திருத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | விபத்தின் காரணமாக மரணமடைந்தால் | ரூ.1.75 இலட்சம் |
| 2 | விபத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட உடல் உறுப்புகள் இழந்தால் | ரூ.1.75 இலட்சம் |
| 3 | விபத்தில் ஏதாவது ஒரு உடல் உறுப்பு இழந்தால் | ரூ.75,000/– |
| 4(அ) | வரிசை எண். (1) அல்லது (2) அல்லது (3) ல் தெரிவிக்கப்பட்ட நிதி உதவியுடன் கூடுதலாக கல்வி உதவித்தொகை –21 வயதுக்குட்பட்ட இரண்டு குழந்தைகளுக்கு | ரூ.10,000/– |
| 4(ஆ) | வரிசை எண். (1) அல்லது (2) அல்லது (3) ல் தெரிவிக்கப்பட்ட நிதி உதவியுடன் கூடுதலாக திருமண உதவித்தொகை – திருமணம் செய்ய சட்டப்படி வயது தகுதியுடைய ஒரு பெண் குழந்தைக்கு | ரூ.10,000/– |

இந்த நிதியிலிருந்து ரூ.85.75 இலட்சம் 49 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.07.2015 அன்று வழங்கப்பட்டது.

**10.4 பால் உற்பத்தியாளர்களுக்கு ஒன்றியங்கள் வழங்கும் ஊக்கத்தொகை**

மாவட்ட ஒன்றியங்கள் செலவுகளை விட உபரி வருமானம் ஈட்டும் நிலையில், அந்த வருமானத்தை பகிர்ந்தளிக்கும் விதமாக லிட்டர் ஒன்றுக்கு 60 பைசா முதல் ரூ.1.60 வரை பால் வழங்கிய உறுப்பினர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கி வருகிறது. சங்கத்திற்கு பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு 2006 முதல் 2011 வரையான ஐந்தாண்டு காலத்தில் ஊக்கத்தொகையாக ரூ.30.22 கோடி வழங்கிய நிலையில் கடந்த நான்கு ஆண்டுகளில் (2011–15 வரை) ரூ.157.22 கோடி ஊக்கத் தொகையாக 3,48,019 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.






**10.5 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் போனஸ் வழங்குதல்:-**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் துணை விதிகளில் சங்கம் ஈட்டும் நிகர இலாபத்தில் 50 விழுக்காடு வரை உறுப்பினர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர் களுக்கு சங்கங்கள் இலாபம் ஈட்டும் போது அத்தொகை, உறுப்பினர்களுக்கு பங்குகளுக்கான ஈவுத்தொகை, ஊக்கத் தொகை மற்றும் 50 சதவீத போனஸ் ஆகியவை அவர்கள் சங்கத்திற்கு அளிக்கும் பாலின் மதிப்பிற்கு ஏற்ப வழங்கப்படுகிறது.



கடந்த நான்கு ஆண்டுகளில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 1.09 இலட்சம் உறுப்பினர்களுக்கு ரூ.57.29 கோடி, போனஸ், பங்கு ஈவுத்தொகை மற்றும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**10.6 உறுப்பினர்களுக்கு நட்சத்திர அந்தஸ்து வழங்குதல்**:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தி பாராட்டும் விதமாக ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் தலா 300 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.1.02 கோடி மதிப்பில் நட்சத்திர அந்தஸ்து வழங்கப்படும் என்று 17.04.2013 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

அதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் வாரியாக 300 சிறந்த பால் உற்பத்தியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு நட்சத்திர அந்தஸ்துக்கான சான்றிதழ் மற்றும் முதல் 100 இடங்களை பெற்றவர்களுக்கு தலா ரூ.3,000/– ரொக்கப் பரிசாகவும், இரண்டாம் 100 இடங்களை பெற்றவர்களுக்கு தலா ரூ.2,000/– ரொக்கப் பரிசாகவும் மூன்றாம் 100 இடங்களை



பெற்றவர்களுக்கு தலா ரூ.1,000/– ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் 5,100 சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கு நட்சத்திர அந்தஸ்தும், ரொக்கப் பரிசும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

**10.7 சங்கங்களுக்கு நட்சத்திர அந்தஸ்து வழங்குதல்**:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.14.45 இலட்சம் மதிப்பில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் பால் வழங்கும் 10 சிறந்த தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளுக்கு நட்சத்திர அந்தஸ்து வழங்கப்படும் என்று 17.04.2013 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

அதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்து 10 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நட்சத்திர அந்தஸ்திற்கான சான்றிதழும், முதலிடம் பெறும் சங்கத்திற்கு ரூ.25,000/–ம் இரண்டாம் இடம் பெறும் சங்கத்திற்கு ரூ.15,000/–ம் மூன்றாம் இடம் பெறும் சங்கத்திற்கு ரூ.10,000/–ம் மற்ற ஏழு இடங்களை பெறும் சங்கங்களுக்கு தலா ரூ.5,000/– மும் வழங்கப்படுகிறது.

ஆக மொத்தம் 170 சங்கங்களுக்கு நட்சத்திர அந்தஸ்தும் ரொக்கப் பரிசும் இந்த ஆண்டு வழங்கப்பட்டது.

**10.8 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்**:-

பாலின் ஆரம்ப தரத்தை நிலைப்படுத்தவும், வைப்புத்திறனை நீட்டிக்கவும், பால் உற்பத்தியாளர்கள் எந்நேரத்திலும் பால் வழங்கவும் 2,000, 3,000 மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன.

**கீழ்க்கண்ட அளவீடுகளில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன.**

1. சங்கத்தின் கொள்முதல் அல்லது அதன் தொகுப்பு சங்கங்களின் கூட்டு கொள்முதல் நாள் ஒன்றுக்கு சராசரியாக 2,000 லிட்டர் இருக்கவேண்டும்.
2. தொகுப்பு சங்கங்கள் (Cluster Societies) அதிகபட்சம் 10 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் இருக்க வேண்டும்.
3. சங்கத்தில் மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவ போதுமான இடவசதி / கட்டட வசதி இருக்க வேண்டும்.



இதுவரை 274 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. இவைகளின் குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு 11.79 இலட்சம் லிட்டர் ஆகும்.

**11. பணியாளர் நலன்**:-

1) கடந்த நான்கு ஆண்டுகளில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, இணையம் மற்றும் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூ.232.02 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
2) கடந்த நான்கு ஆண்டுகளில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகையாக ரூ.1,809.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
3) கடந்த நான்கு ஆண்டுகளில், இணையம் மற்றும் ஒன்றிய பணியாளர்களுக்கு தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு ரூ.233.50 இலட்சம் மதிப்புள்ள பால் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.



4) அரசு அனுமதி பெற்று 10 மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களை சேர்ந்த 155 தினக்கூலி பணியாளர்களுக்கு ரூ.3,840–8,000 + தர ஊதியம் ரூ.1,040 + தகுதியுடைய அகவிலைப்படியுடன் கூடிய சம்பள விகிதம் வழங்கப்பட்டது.
5) தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் நிவர்த்தி: தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பணிபுரிந்த பணியாளர்கள் ஓய்வூதிய பலன்களை தணிக்கை தடை காரணமாக பெற இயலாத நிலை இருந்தது. தணிக்கை தடைகளுக்கான குறை நிவர்த்தியினை ஏற்றுக்கொண்டு அதனை தீர்வு செய்யும் அதிகாரம் தணிக்கை மறு ஆய்வு (கணக்கு) குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. தணிக்கை தடை மீது உடனடியாக முடிவெடுக்கும் பொருட்டு, இக்குழுவின் கூட்டங்கள் தலைமை அலுவலகத்திலும், மாவட்ட பால்



உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைமையிடத்திலும் கூட்டப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இக்குழு 52 கூட்டங்கள் நடத்தி 958 தணிக்கை தடைகளுக்கு தீர்வு கண்டுள்ளது. இதன் அடிப்படையில் 75 ஓய்வு பெற்ற பணியாளர்கள் ஓய்வூதிய பலன்கள் பெற வழிவகை ஏற்பட்டது. மேலும், இக்கூட்டத்தில் ரூ.570.14 கோடி மதிப்பிலான சட்டபூர்வமற்ற ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் ஐந்தொகை பட்டியல் இருப்பு நிலைக் குறிப்பு (Balance Sheet) சீரமைக்கப்பட்டுள்ளது.

**12. இரண்டாம் வெண்மை புரட்சியில் முக்கிய சாதனைகள்**

- 22.6.2015 அன்று 30.94 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் வரலாறு படைத்துள்ளது.
- கடந்த நான்கு ஆண்டுகளில் கொள்முதல் விலையில் பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.10/–ம் (ரூ.18/–லிருந்து ரூ.28/–) எருமை பால் லிட்டர்

ஒன்றுக்கு ரூ.9/–ம் (ரூ.26/–லிருந்து ரூ.35/–) உயர்த்தப்பட்டுள்ளது

- பால் உற்பத்தியாளர்களுக்கு பாலுக்கான நிலுவைத் தொகையினை உடன் வழங்க ஆவின் நிறுவனத்திற்கு ரூ.192.14 கோடி வழிவகை முன்பணமாக அரசு வழங்கியுள்ளது
- உபரி வருவாய் ஈட்டிய தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் ரூ.214.51 கோடியினை போனஸ், பங்கு ஈவுத் தொகை மற்றும் ஊக்கத்தொகையாக 3.48 இலட்சம் உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளது.
- 4,177 கிராமங்களில் புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது
- 2013–14ல் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ரூ.35.32 கோடி செலவில் 3,21,521 விவசாயிகள் பயனடையும் வகையில் மானிய விலையில் கால்நடை தீவனம், தாது உப்புக் கலவை மற்றும் பசுந்தீவனம் வழங்கப்பட்டுள்ளது.



- கால்நடை தீவனம் கிலோ ஒன்றுக்கு ரூ.2/– முதல் ரூ.4/– வரையான மானியத்துடன் ஒன்றியங்களின் நிதியிலிருந்து தொடர்ந்து வழங்கப்படுகிறது
- கறவை மாடுகளின் பால் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், அதன் மூலம் பால் உற்பத்தியினைப் பெருக்க, வேலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி ஆகிய 5 ஒன்றியங்களில், தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் கீழ், வம்சா வழி சோதனைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- ரூ.409.94 கோடி முதலீட்டில் பால்பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ரூ.26.32 கோடி செலவில் 120 மொத்த பால் குளிர்விப்பான்கள் புதிதாக நிறுவப்பட்டதன் மூலம் பால் குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு 6 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது
- அதிகரித்து வரும் ஆவின் பொருட்களின் தேவையை கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ் கிரீம் மற்றும் 1,000 கிலோ பனீர்



தயாரிக்க தேவையான புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மொத்த ஆண்டு விற்பனை வருவாய் ரூ.2,369 கோடியிலிருந்து ரூ.3,881 கோடியாக உயர்வு.
- புதுக்கோட்டையில் ரூ.2.99 கோடி செலவில், நாளொன்றுக்கு 35,000 லிட்டர் திறன் கொண்ட பால்பண்ணைஅமைக்கப்பட்டுள்ளது.
- காக்களூர் பால்பண்ணை நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணையாக ரூ.4.51 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- ஈரோடு கால்நடை தீவன ஆலையில் ரூ.3.50 கோடி செலவில், மூலப்பொருள் மற்றும் கால்நடைத் தீவன சேமிப்பு கிடங்குகள் உருவாக்கப்பட்டுள்ளது.
- திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் ரூ.72.60 கோடி செலவில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் மற்றும்



20 மெட்ரிக் டன் பால் பொடி உற்பத்தி திறன் கொண்ட பால்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

- மாதவரம் பால்பண்ணையின் கொள்திறன் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் என்ற நிலையிலிருந்து 3.5 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- ஸ்மார்ட் கார்டு திட்டம் மூலம் ஆவின் பால் நுகர்வோர் www.aavinmilk.com என்ற இணைய தளம் மூலம் மாதாந்திர பால் அட்டைகளை புதுப்பித்துக் கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் சுயநிதியிலிருந்து சுமார் ரூ.19.41 கோடி மதிப்பீட்டில் தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுவப் பட்டுள்ளது
- கோயம்புத்தூர் பால்பண்ணையின் கொள் திறன் ரூ.46 கோடி செலவில் நாளொன்றுக்கு 2 இலட்சத்திலிருந்து 5 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

- மதுரை பால்பண்ணை உட்கட்டமைப்பு மற்றும் தேனி மாவட்டத்திலுள்ள பால் குளிரூட்டும் நிலையம் ரூ.1618.76 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த கூட்டுறவு பால்பெருக்கத் திட்டத்தின்கீழ் அதன் திறன் 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.
- ரூ.18.34 கோடி செலவில், இணையம் மற்றும் சமன்படுத்தும் பால்பண்ணைகளான சேலம், ஈரோடு, மதுரை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்தி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

➢ ஒன்றிய பணியாளர்களுக்கான சிறப்பு துணை விதிகள் ஏற்படுத்த குழு அமைக்கப்பட்டு குழுவின் பரிந்துரைப்படி துணைவிதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



➢ இணையத்தில் 970 மற்றும் ஒன்றியத்தில் 507 பணியாளர்களுக்கு ஆக 1,447 பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

➢ மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 104 நபர்களும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 355 நபர்களும் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

➢ கருணை அடிப்படையில் ஒன்றியங்களில் 68 நபர்கள் மற்றும் இணையத்தில் 56 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

➢ முதல் முறையாக தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கு பால் உற்பத்தி / விற்பனை அடிப்படையில் காலமுறை ஊதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**13. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை 1–10–1987 முதல் பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வத் தணிக்கைப்பணியினை, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988ன்படி மேற்கொண்டு வருகிறது.



பால் கூட்டுறவுகளின் தணிக்கை கீழ்க்காணும் மூன்று அடுக்குகளில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்படுகிறது. அவையாவன:

1) மாநில அளவில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.
2) மாவட்ட அளவில் 17 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்.
3) தொடக்க பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மேற்கொள்வதற்காக பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறைக்கு 335 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 28 பணியிடங்கள் பால் கூட்டுறவு தணிக்கைத்துறையை சார்ந்ததாகும். மற்ற 305 பணியிடங்கள் கூட்டுறவுத் துறை மற்றும் கருவூலக் கணக்குத்துறையிலிருந்து பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு



ஒன்றியங்கள் மற்றும் தகுதியுடைய அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் 2013–14ம் ஆண்டிற்கான சட்டப்பூர்வ தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

முதன்முறையாக, 2014–15 ஆம் ஆண்டிற்கான அரையாண்டுத் தணிக்கை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் முடிக்கப்பட்டு தணிக்கை சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் 2014–15ம் ஆண்டிற்கான சட்டப்பூர்வ தணிக்கை முடிக்கப்பட்டு 30–06–2015ல் தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. ஏனைய ஒன்றியங்களின் தணிக்கைப் பணி நடைப்பெற்று வருகிறது. 2616 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் 2014–15ம் ஆண்டிற்கான சட்டப்பூர்வ தணிக்கை 14–8–2015 வரை

முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 13.1 தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதிக்கட்டணம்

1–4–2014 முதல் 31–3–2015 வரை, தணிக்கைக்கட்டணம் ரூ. 72.34 லட்சம் வசூலிக்கப்பட்டு அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அடிப்படை விதிக் கட்டணம் ரூ. 64.97 லட்சம் வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

### 13.2 தணிக்கை மறு ஆய்வு (கணக்கு) குழுக்கூட்டம்

தணிக்கைக் குறைகள் நிவர்த்தி செய்வதற்காக தணிக்கை மறு ஆய்வுக்குழுக் கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. 2014–15ம் ஆண்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 3 தணிக்கை குறைகள் 61.09 லட்சம் அளவிற்கும், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 511 தணிக்கைக் குறைகள் ரூ.21247.78 லட்சம் அளவிற்கும் மற்றும் 1057 தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில், 1746 தணிக்கைக் குறைகள் ரூ.1216.21 லட்சம் அளவிற்கும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.



### 14. முடிவுரை

மாநிலத்தின் கிராமப்புற பொருளாதாரத்தில் பால் கூட்டுறவு அமைப்பு முக்கிய பங்காற்றுகிறது. பால் கொள்முதல் விலையில் பால்மிகு காலம் (Flush Season) மற்றும் வற்றுகாலங்களில் (Lean Season) காணப்படும் ஏற்றத்தாழ்வுகளிலிருந்து பால் உற்பத்தியாளர்களை பாதுகாத்து உதவுகிறது. தனியார் நிறுவனங்கள் பால் மிகு காலங்களில் கொள்முதல் விலை மற்றும் கொள்முதல் அளவை குறைக்கும் போது நிலையான மற்றும் நம்பகமான அமைப்பாக பால் கூட்டுறவு விளங்குகிறது. மேலும் தரமான பால் நியாயமான விலையில் நுகர்வோர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்கிறது. சந்தையினை பிறர், இலாப நோக்குடன் சூழ்ச்சியான முறையில் மாற்றி அமைக்கப்படாமல் இருப்பதை, வலுவான பால் கூட்டுறவு அமைப்பு உறுதி செய்கிறது மற்றும் இதன் மூலம் பால் உற்பத்தியாளர்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது.



தமிழ்நாடு அரசு, கூட்டுறவு அமைப்பினை நிதி உதவி மற்றும் நிர்வாக வழிகாட்டுதல்கள் வழங்குவதன் மூலம் பெருமளவில் ஆதரித்து வருகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் முன்பு ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு 25 லட்சம் லிட்டர் பாலை கையாளவே சிரமபட்ட நிலையிலிருந்து தற்போது நாளொன்றுக்கு 31 லட்சம் லிட்டர் பாலை எளிதாக கையாளுகிறது.

அரசு பால் கொள்முதல் விலையினை குறிப்பிடும்படி உயர்த்தியதன் விளைவாக, பால் விற்பனை அளவினை குறைவின்றி வழங்க வெளி மாநிலங்களி லிருந்து பால் பவுடர் மற்றும் வெண்ணெய் கொள்முதல் செய்ய வேண்டிய நிலையில் இருந்த ஆவின் நிறுவனத்தின் நிலை தற்போது முற்றிலும் மாறியுள்ளது. இதன் காரணமாக 31.07.2015ல் பால்பவுடர் இருப்பு 10,225 மெட்ரிக் டன் மற்றும் வெண்ணெய் இருப்பு 5,365 மெட்ரிக் டன் உபரியாக வைத்திருக்கும் ஒரு சூழ்நிலை ஆவின் நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது.



பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலை கிடைக்கச்செய்தல், நுகர்வோர்களுக்கு தரமான பாலினை நியாயமான விலையில் அளித்தல் ஆகிய இரு குறிக்கோள்களை தொலைநோக்கு பார்வையில் கொண்டு செயல்பட்டுவரும் பால்வளத்துறையின் கீழ் இயங்கும் பால் கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்தி உயர்வான நிலையினை எய்திட அரசு முடுக்கி விட்டுள்ளது.

**BV ரமணா**
பால் மற்றும் பால்பண்ணை
மேம்பாட்டுத்துறை
அமைச்சர்

## பால் கூட்டுறவுகள் குறித்த மேலோட்ட பார்வை

| வ. எண் | பொருள் | |
|---|---|---|
| 1 | தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | 11,839 |
| 2 | 2014–2015ல் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்) | 842 |
| 3 | தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 22.95 |
| 4 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 4.60 |
| 5 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 26 முதல் 33 |
| 6 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 7 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 8 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 25 முதல்31 |
| 9 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 11.70 |
| 10 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 9.50 |
| 11 | ஒன்றியங்களில் பால் பதப்படுத்தும் பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 17 |
| 12 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 5 |
| 13 | ஒன்றியங்களின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 21.07 |
| 14 | இணையத்திலுள்ள பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 11.50 |
| 15 | பால் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 35 |
| 16 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 14.75 |
| 17 | மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கை | 274 |
| 18 | மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 11.79 |
| 19 | கிராம பால் கொள்முதல் வழித்தடங்கள் எண்ணிக்கை | 530 |
| 20 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 266 |
| 21 | சென்னை மாநகர பால் வினியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 117 |
| 22 | பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை (ஈரோடு, சேலம், மதுரை தருமபுரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்) | 5 |
| 23 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/ நாள்) | 90 |
| 24 | வெண்ணெய் சேமிக்கும் திறன்( மெ.டன்) | 2,834 |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம் அம்மாபாளையத்தில் ரூ.72.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலையை 15.07.2015 அன்று துவக்கி வைத்தார்கள்.


சென்னை, சோழிங்கநல்லூர் தானியங்கி பால்பண்ணையின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் கட்டுப்பாட்டு அறை.



தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் தரப்பரிசோதனை அடிப்படையில் பால் கொள்முதல் செய்தல்.



பாக்கெட்டுகளில் நெய் அடைக்கும் இயந்திரம்



தொடக்க பால் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு பால் பணப்பட்டுவாடா செய்தல்.



கோணிப்பைகளில் பால் பவுடர் நிரப்புதல்



பால் பொருட்கள் சிப்பம் கட்டும் பணி



டெட்ரா பேக் முறையில் குளிர்பானங்கள் நிரப்புதல்




கோன் ஐஸ்கிரீம் தயாரித்தல்



பால் பண்ணைகளில் பெறப்பட்ட பால், சைலோக்களில் சேமித்தல்